


# தேசம்

NATION THE THESAM




Issue : 03 Once a Month May 2024




## மக்களால் பாராளுமன்றம் அனுப்பப்படுவோர் தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை பெற்றுக்கொடுத்திருக்கின்றார்களா என்பது தொடர்பில் அறிந்து கொள்வது அவசியம்.



## சுமந்திரன் தனது கடந்த கால தவறுகளை உணர்ந்து இதில் இருந்து தெளிந்து எழுந்தால் தமிழ் தேசியம் தனதாக்கிக் கொள்ளும் நிலை ஏற்படலாம்



## விடுதலைப்புலிகள் மீதான தடையை மேலும் 5 ஆண்டுகளுக்கு நீடிப்பதாக இந்திய அரசு அறித்துள்ளதை கண்டிக்கின்றேன்!

**உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன்**

விடுதலைப்புலிகள் இயக்கம் மீது தடையை நீடிப்பது எந்த வகையிலும் நீதியின்பால் பட்டதல்ல. அநீதியான இந்தத் தடை விதிப்பை வன்மையாகக் கண்டிப்பதாக உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்தார்.

## National Ethnic Press and Media Council of Canada celebrates International Press Freedom Day, at Members Lounge of Council Chambers, Toronto City Hall.

கனடா 'கனடிய பல்லின பத்திரிகையாளர்கள் கழகம்'
'சர்வதேச பத்திரிகைச் சுதந்திர நாளை' கொண்டாடி மகிழ்ந்தது.
10-05-2024 அன்று வெள்ளிக்கிழமையன்று கனடாவில் இயங்கிவரும்
'கனடிய பல்லின பத்திரிகையாளர்கள் கழகம்' தனது அங்கத்தவர்கள் மற்றும்
அரசியல் தலைவர்கள் ஆகியோர் சகிதம் 'சர்வதேச பத்திரிகைச் சுதந்திர நாளை' கொண்டாடி மகிழ்ந்தது.



# விரைவில் நடைபெறவுள்ள இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட பொதுவேட்பாளராக நிறுத்தப்படும் நபர் அரசியல்வாதியல்லாதவராக இருக்க வேண்டும் !

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிப்பு

விரைவில் நடைபெறவுள்ள இலங்கையின் ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தலில் போட்டியிடும் பொதுவேட்பாளராக நிறுத்தப்படும் நபர் அரசியல்வாதியல்லாதவராக இருப்பதோடு, தேர்தலின் பின்னர் அந்நபர் எந்தவொரு அரசியல் கட்சியுடனும் இணைந்து செயற்படுவதோ, தேர்தல் அரசியலில் ஈடுபடுவதோ தவிர்க்கப்பட வேண்டும் என்பது முன்நிபந்தனையாக்கப்பட வேண்டும்.
இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தற்போதைய தமிழர் அரசியல் நிலவரம் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2009 இற்குப் பின்னரான 15 ஆண்டுகள் காலத்தில் சாணக்கியம், ராஜதந்திரம் என்னும் பெயரில் வெற்று வாக்குறுதிகளை மாத்திரமே நம்பி தமிழ்த் தரப்புக்களால் முன்னெடுக்கப்படும் பேரம் பேசும் இணக்க அரசியலினால் தமிழினவழிப்பிலிருந்து தாயகத்தின் ஒரு அங்குல நிலத்தையேனும் காப்பாற்ற முடியவில்லை என்பதோடு, தமிழ் மக்களும் தமிழ்த் தேசிய அரசியற்கட்சிகளும் உதிரிகளாக்கப்பட்டுள்ளமையும் அது உளவியல்ரீதியில் தோல்வி மற்றும் அடிமைத்துவ மனநிலையினை மக்களிடையே விதைப்பதிலுமே வெற்றியடைந்துள்ளது.
ஈழத்தமிழ் மக்களை அரசியற்படுத்தி அணிதிரட்டுதல்.
போரிற்குப் பின் மக்களிடையே உள்ள தோல்வி மனோநிலையினை அகற்றுதல்.
வடக்கு - கிழக்கிற்கான பொருளாதாரக் கட்டமைப்பை நிறுவுதல்.
அரசற்ற தரப்பாக பன்னாடுகளைக் கையாள்வதற்கான வெளிவிவகாரக் கொள்கை மற்றும் கட்டமைப்பை உருவாக்குதல்.
பன்னாட்டுச் சமூகத்தில் கூட்டாகத் தமிழரின் குரலை முன்வைத்தல்.
வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கப்படும் தொடர்ச்சியான கட்டமைக்கப்பட்ட இனவழிப்பினை தடுத்துநிறுத்துதல்.
அதிகாரப்பகிர்வோடு எவ்விதத்திலும் தொடர்பற்ற சிறிலங்கா ஒற்றையாட்சி அரசியலமைப்பிற்குட்பட்ட 13ஆம் திருத்தத்திற்கு அப்பால் தமிழ் அரசியலை நகர்த்துதல்.
ஓர் அரசற்ற தரப்பாக எமது தமிழ்ச் சமூகத்தினால் அடைந்து கொள்ளப்பட்டிருக்க வேண்டிய மேற்குறிப்பிட்ட விடயங்களெதனையும் சாதித்திராத தமிழ் அரசியற் தரப்புக்கள் தொடர்ந்தும் பேரம் பேசும் அரசியலால் இனியும் எதையாவது சாதிக்கும் என்பதில் நம்பிக்கையில்லை. தமிழ் அரசியற்கட்சிகளும், குடிமக்கள் சமூகத்தினரும் (ஊளைடை ளுழஉநைவநைள) தமிழ் மக்களின் பின்நோக்கிய இந்நிலையிலாவது தம்மைச் சுதாகரித்துக் கொண்டு தமிழ் அரசியலின் பாதையினை மீளச் சரிவர தகவமைத்துக் கொள்ள வேண்டும்.

கடந்த 2010, 2015, 2019 ஆண்டுகளில் நடைபெற்ற இலங்கையின் அரச தலைவர் தேர்தல்களில் இனப்படுகொலைப் பொறுப்பாளிகளான ஒரு தரப்பினரை எதிர்ப்பதாகக் கூறி, இனப்படுகொலைக் குற்றத்தைப் புரிந்த சிறிலங்காவின் இராணுவத் தளபதி, பதில் பாதுகாப்பு அமைச்சர், போர்க்குற்றம் புரிந்த பெருமளவான இராணுவத்தினரின் ஆதரவினைப் பெற்ற நபர்களுக்கே வாக்களிப்பதற்குப் பரிகார நீதி கோரக்கூடிய தமிழ் மக்கள் தவறாக வழிநடாத்தப்பட்டோம்.




இனியாவது ஏமாற்று கபட அரசியலிற்குப் பலியாகாமல், தமிழ் மக்களின் வாக்குகள் சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் முகவர்களுக்கோ, வெளித்தரப்புக்களுக்கோ சென்றுசேர்வதைத் தவிர்த்து, தமிழ்மக்களின் அரசியல் வேணவாக்களைப் பிரதிபலிக்கும் தீர்மானங்களை தமிழ் அரசியற் தரப்புக்கள் மேற்கொள்ளத் தவறுமேயானால் நாம் அரசியல் பிழைத்த மக்களாக்களாக்கப்படுவோம்.

சமகால அரசியற் களச்சூழலில் தமிழ் மக்களின் முன்னால் உள்ள தெரிவுகள்,
சிறிலங்காவின் அரச தலைவர் தேர்தலைப் புறக்கணித்தல்.
சிறிலங்காவின் அரச தலைவரைத் தேர்வு செய்வதற்கான தேர்தல் என்ற அடிப்படையில் தற்போது எதிர்பார்க்கப்படும் தேர்தலை நிராகரித்து, அத்தேர்தலை நடைமுறையில் ஈழத்தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்கான அறைகூவல் விடுக்கும் பொதுவாக்கெடுப்பாகக் கையாளும் வகையில் தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துதல்.
சிறிலங்காவின் அரச தலைவர் தேர்தலைப் புறக்கணித்தல் மற்றும் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துதல் இரண்டும் ஒரே கருத்தியலின் இருவேறுபட்ட பிரயோக வடிவங்களே! தமிழர்களால் அளிக்கப்படாத வாக்குகள் மற்றும் பொதுவேட்பாளருக்கு வழங்கப்படும் வாக்குகள் என இரண்டுமே சிங்கள - பௌத்த பெருந்தேசியவாதத்தின் முகவர்களை நிராகரிக்கும் வாக்குகளேயாகும்.

பொதுவேட்பாளர் தொடர்பில் தீர்க்கமான முடிவுகள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில், பின்வரும் விடயங்களில் கூடுதல் கவனம் செலுத்த தமிழ் மக்கள் உள்ளிட்ட தொடர்புபட்ட தரப்புக்கள் அனைவரையும் வலியுறுத்துகின்றோம்.

சிறிலங்காவின் அரச தலைவர் தேர்தலைப் புறக்கணிப்பதனாலோ, தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவதனாலோ சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் முகவர் எவர் வென்றுவிடக் கூடும் எனும் கேள்வி பொதுவில் அனைவரிடமும் எழக்கூடியதொன்று. ஆனால், அரசியல் விடுதலை வேண்டும் சமூகமாக எமக்கு எது தேவை? எமது நிலைப்பாடு என்ன? என்பதுவே நாம் அக்கறை கொள்ளவேண்டியது. அதன் பக்க விளைவுகளைப் பற்றியல்ல.
பொதுவேட்பாளரை நிறுத்துதல் என்பது எதிர்வரும் சிறிலங்காவின் அரச தலைவர் தேர்தலைத் தமிழ் மக்களின் வேணவாக்களைப் பிரதிபலிக்கும் தேர்தல் ஒன்றாக மாற்றுவதேயாகும். ஆகவே, பொதுவேட்பாளர் எனும் எண்ணக்கரு நடைமுறையில் வெற்றி - தோல்விகளுக்கு அப்பாற்பட்டதாகும்.
பொதுவேட்பாளர் தமிழ் மக்களின் இதுவரைகால வேணவாக்களை பிரதிபலிக்க வேண்டுமேயன்றி, குறிப்பிட்ட சில தரப்புக்களின் அரசியல் நலன்களையல்ல.
பொதுவேட்பாளர் தமிழ் மக்களின் குறியீடாக நிறுத்தப்பட வேண்டும். முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தை அடையாளப்படுத்தும் வகையில் கிழக்கிலிருந்து வேட்பாளர் தேர்வு நடைபெற வேண்டும். அவ்வேட்பாளர் பெண்ணொருவாராக இருப்பின் உத்தமம்.
தமிழ்மக்களின் வாக்குகள் என்பது அவர்தம் வேணவாக்களைச் உறுதிபடச் சொல்வதற்கேயன்றி பேரங்கள் பேசுவதற்கல்ல. ஆகவே இரண்டாம், மூன்றாம் விருப்பு வாக்குகள் என்ற பேச்சுக்களுக்கே இடமளித்தல் கூடாது.
பொதுவேட்பாளராக நிறுத்தப்படும் நபர் அரசியல்வாதியல்லாதவராக இருப்பதோடு, தேர்தலின் பின்னர் அந்நபர் எந்தவொரு அரசியல் கட்சியுடனும் இணைந்து செயற்படுவதோ, தேர்தல் அரசியலில் ஈடுபடுவதோ தவிர்க்கப்பட வேண்டும் என்பது முன்நிபந்தனையாக்கப்பட வேண்டும்.
மேற்படி விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தமிழ்மக்களின் வாக்குகள் இத்தேர்தலிலாவது அவர்களின் உரிமைக்குரலாகப் பிரயோகிக்கப்பட வேண்டும். மேற்கண்ட தெரிவுகளில் தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் குடிமக்கள் சமூகத்தினர் உள்ளிட்ட அனைவரும் இணைந்து கூட்டாகத் தீர்மானமொன்றினை மேற்கொள்ளும் பட்சத்தில், தமிழ்ப்பொதுவேட்பாளரை ஆதரிப்பதற்கும் இணைந்து பயணிப்பதற்குமான எமது உடன்பாட்டினை மாணவர் சமூகமாக நாம் வெளிப்படுத்துகின்றோம்.

தமிழ் மக்களின் வாக்குகள் சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் முகவர்களுடனான பேரம் பேசலுக்காகப் பலியாக்கப்படாது. தமிழ்மக்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு, தமிழ் அரசியற்கட்சிகள் மற்றும் குடிமக்கள் சமூகத்தினர் ஒன்றுபட்டுத் தீர்க்கமான முடிவொன்றினைத் திடசித்தத்துடன் மேற்கொள்வதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் சமூகமாக வலியுறுத்தி நிற்கின்றோம்.

நன்றி




Thesam Publishers
தேசம்
தேசம் வெளியீட்டாளர்கள்

EDITORIAL TEAM - THESAM
GRAPHIC: HEVEN
TECHNICAL: Y.INTHUNATHAN
PRINTERS: PRINT TECK
MARKETING & DISTRIBUTION
MANAGER - Ramsankr Sivanathan: 647.891.7725

Phone: 647 848 1113
Unit #201, 3967 Lawrence Ave East, Scarbourough, ON, M1G 1S2
Email: info@thethesam.com www.thethesam.com

# தேசம் குரல் –மே 2024

கனடாவிலிருந்து வெளிவரும் எமது 'தேசம்' மாத இதழின் மூன்றாவது இதழ் உங்கள் கரங்களில் தவழுகின்றது. அச்சு ஊடகப் பரப்பில் உலகளவில் தளர்வு தோன்றியிருப்பதால் ஆங்காங்கே 'முனகல்'கள் கேட்கின்றன. ஆனால் சமூக ஊடகங்கள் எழுந்து நின்று தாண்டவமாடுகின்றன. அச்சு ஊடகங்கள் மீதான அவற்றின் தாக்கம் படிப்படியாக அதிகரித்துச் சொல்வது போன்று ஒரு 'மாயை' தோன்றி மறைகின்றது.

இவ்வாறான நேரத்தில் அச்சு ஊடகங்களை நாடிச் செல்லும் வாசகர் கூட்டம் இன்னும் தனது இருப்பை தக்க வைத்துக்கொள்வதனால் எம் போன்ற பத்திரிகை வெளியீட்டாளர்களுக்கு உள்ள நம்பிக்கை தணிந்து விடாமல் உள்ளது. அதன் காரணமாகத்தான் 'தேச'த்தின் மூன்றாவது இதழின் பக்கங்களை வாசகர்களாகிய நீங்கள் புரட்டிப் பார்க்கின்றீர்கள், எமது வெளியீட்டின் நோக்கத்தைப் புரிந்து கொண்டவர்களாக.

எமது 'தேசம்' இதழானது, தாயகம். தமிழகம், கனடா மற்றும் புலத்தில் உள்ள தமிழர்கள் ஆகியோரை நோக்கி படைக்கப்படுகின்றது. கனடாவில் மாத்திரமே அச்சில் வெளிவரும் எமது 'தேசம்' மாத இதழ், ஏனைய பிற நாடுகளில் உள்ள வாசகர்களை நோக்கி இணையத்தில் பவனி வருகின்றது என்பதை அனைவரும் அறிவீர்கள். எனவே எமது அச்சு ஊடகப் பயணம் எவ்வளவு விரிந்தது என்பதை உலகெங்கும் உள்ள எமது வாசகர்களும் படைப்பாளிகளும் புரிந்து கொண்டிருப்பார்கள் என்று நம்புகின்றோம்.

வடக்கு கிழக்கு என்னும் எமது தாயகத் தேசத்தை நாம் நேசிக்கின்றோம். எனவேதான். அங்கு இடம்பெறுகின்ற சமூக அநீதிகள், அரசியல் சார்ந்த 'துரோகங்கள்' சமூகத்தில் இடம்பெறும் சீரழிவுகள் ஆகியவற்றை எடுத்துச் சொல்லும் விடயங்களை தேசம் காவிச் செல்ல வேண்டும் என்பதை உணர்வோடு புரிந்து கொண்டு செயற்படுகின்றோம். நாம் மேற்கூறிய பாதகமான விடயங்களை அரங்கேற்றுபவர்கள் யார் என்பதை உற்று நோக்குகின்றோம். அவர்களில் எமது தமிழ் அரசியல்வாதிகள் உள்ளார்கள், அரச அதிகாரிகள் அடங்குகின்றார்கள். சமூகத்தின் மீது நேசமோ அன்றி பாசமோ இல்லாத 'விரோதிகள்' இணைந்துள்ளார்கள். இதனால் எமது தாயக மண்ணில் தொடர்ந்து அநீதிகள் அரங்கேறுகின்றன.

யுத்தத்தின் காரணமாக பாதிக்கப்பட்ட பொது மக்கள். விதவைகள், முன்னாள் போராளிகள், முதியோர், மாணவ மாணவிகள், குறிப்பாக குடும்பத் தலைவிகளாக விளங்கும் எமது அன்னையர்கள் என அனைவருமே, அங்கு இடம்பெறும் தமிழர் விரோத செயற்பாடுகளால் பாதிக்கப்படும் பிரிவினராக தாக்கங்களுக்கு உள்ளாகின்றார்கள்.

ஆனால் அரசியல்வாதிகளும், அரச அதிகாரிகளும் தங்களுக்கு கிடடும் வாய்ப்புக்களையும் சலுகைகளையும் அதிகாரத்தையும் பயன்படுத்தி தங்கள் 'வேலைகளை' தொடர்கின்றார்கள்.
இவற்றை வெளிச்சத்திற்கு கொண்டு வரும் விசாலமான தளமாக எமது 'தேசம்' விரிவாக்கம் பெறவேண்டும் என்பதே எமக்கு முன்பாக உள்ள பொறுப்பு என்பதையும் நாம் உணர்ந்தவர்களாக பயணிக்கின்றோம்.!

# முள்ளிவாய்க்காலில் வழுங்கப்பட்ட 'முள்ளிவாய்க்கால் கஞ்சி'

## வலி சுமந்த உறவுகளின் உயிர்காத்த உணவு

முள்ளிவாய்க்கால் மனிதப் பேரவலத்தை - தமிழ் இனப் படுகொலையை நினைவூட்டும் வகையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு தொடர்ச்சியாக தமிழர் தாயகம் முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அந்தவகையில் தாயக நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் இறுதி உயிரை காப்பாற்ற வலி சுமந்த உறவுகளின் உயிர்காத்த உணவான முள்ளிவாய்க்கால் கஞ்சியானது முள்ளிவாய்க்கால் மேற்கு பொதுசந்தை கட்டிடத்திற்கு முன்பாக அன்று 16.05.2024 அன்று காலை வழங்கப்பட்டது.

முள்ளிவாய்க்காலில் உயிர்த்த உறவுகளிற்கு அஞ்சலி செலுத்தப்பட்ட நிலையில், அடுத்த சந்ததிக்கு கடத்தும் முகமாக தாயக மற்றும் புலம்பெயர் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்டது.









# “மலையக தமிழ் இலக்கியம்”. ‘மலையக சிறப்பிதழும்

## சிறப்புரை வி.தேவராஜ்



“சி.வி.வேலுப்பிள்ளையின் ஆங்கிலக் கவிதைகளை தமிழ் மொழியில் தந்தவர் சக்தி பாலையா.

“புழுதிப் படுக்கையில்
புதைந்த என் மக்களைப்
போற்றும் இரங்கற்
புகழ் மொழி இல்லை

பழுதிலா அவர்க் கோர்
கல்லறை இல்லை
பரிந்தவர் நினைவுநாள்
பகருவார் இல்லை.

ஊணையும் உடலையும்
ஊட்டி இம் மண்ணை
உயிர்த்த வர்க்(கு) இங்கே
உளங்கசிந் தன்பும்

பூணுவாரில்லை - அவர்
புதைமேட்டிலோர் - கானகப்
பூவைப் பறித்துப்
போடுவாரில்லையே.”

- இரண்டாவது கவிதை

“ஆழப் புதைந்த
தேயிலைச் செடியின்
அடியிற் புதைந்த
அப்பனின் சிதைமேல்

ஏழை மகனும்
ஏறி மிதித்து
இங்கெவர் வாழவோ
தன்னுயிர் தருவன்.

என்னே மனிதர்
இவரே இறந்தார்க்கு
இங்கோர் கல்லறை
எடுத்திலர்! வெட்கம்

தன்னை மறைக்கத்
தானோ அவ்விறைவனும்
தளிர் பசும் புல்லால்
தரை மறைத்தனனோ!”

- மலையகம் சம்பந்தப்பட்ட மக்கள் இலக்கியம் இவ்விலக்கியத்தின் அடியாக தோன்ற வேண்டியவையே. சி.வி.வேலுப்பிள்ளை என்.எஸ். எம். இராமையா முதலானோரின் படைப்புகள் நாட்டார் இலக்கியத்தின் மறு பதிவுகளாக காணப்படுகின்றன எனக் கூறலாம்.
மலையக நாட்டார் பாடல்களை நுண்ணியத்துடன் நோக்குகின்ற போது மலையக வாழ்வியலை அடியாகக் கொண்டு தோற்றம் பெற்ற முதல் இலக்கிய படைப்புகளாக இவை அமைந்து காணப்படுகின்றன என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்..

- அதே வேளையில் வாய் மொழிப் பாடல்களில் எராளமான வரலாற்றுத் தகவல்களை உள்ளடக்கிய பாடல்களை மலையகத்திலேயே காண முடிகின்றதென்பதை சி.வி.வேலுப்பிள்ளை ஏ.வி. பி.கோமஸ் சாரல்நாடன்ஆகியோரால் எழுதப்பட்டுள்ள மலைநாட்டு மக்கள் பாடல்கள் (1983) அங்கமெல்லாம் நெறஞ்ச மச்சான் (1988) மலையக வாய் மொழி இலக்கியம் (1993) என்ற நூல்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

- “ஆரம்ப கால மலையக எழுத்து இலக்கியம்” மலையக மக்கள் மத்தியில் இருந்து எழவில்லை.

பெருந்தோட்ட பயிர்ச் செய்கையுடன் அழைத்து வரப்பட்ட பயிர்ச் செய்கையாளர்களே இலங்கையில் ஒரு புதிய இலக்கிய தோற்றத்திற்குக் காரணமாயினர். பயிர்ச்செய்கையை அறிமுகம் செய்த ஆங்கிலேயர்களில் பெரும்பாலானவர்களுக்கு முறையான படிப்பில்லை. ஒரு சிலர் தங்களது படிப்பறிவினால் இலங்கை மலைப் பிரதேசங்களில் ஏற்பட்டு வரும் புதிய மாற்றங்களையும் உள்ளூர் வாசிகளிடம் அதனால் ஏற்பட்டு வரும் மாற்றங்களையூம் மனோபாவத்தையும் எழுத்தில் வடித்துள்ளனர். இவ்வாறு கட்டுரை வடிவத்தில் அமைந்த பல நூல்களும் அடங்குகின்றன.

- வில்லியம் நைட்டோன் “கானக வாழ்வு என்ற பெயரில் இரண்டு பாகங்களில் ஒரு நாவலை முறையே 1854 - 1868 என்ற கால வரிசையில் வெளியிட்டுள்ளார்..
அதே வேளையில் தேட்டப் பயிர்ச் செய்கையாளர்கள் தமது அனுபவங்களைத் தமது மொழியில் பிரித்தானியருக்கு கொடுத்துக் கொண்டிருந்தனர் என்கிறார் யஸ்மின்.

இதே நிலப்பரப்பில் பல்லாயிரக்கணக்கில் குடியேறிய இதுவரை காலம் தாம் அறிந்திராத அநுபவங்களைத் தரிசித்த தமிழ் மொழி பேசிய கூட்டத்தினரின் சுவடுகள் ஆங்காங்கே இந்த ஆங்கிலப் படைப்புக்களில் காணக் கிடைக்கின்றதே தவிரத் தமிழ் மொழியில் எழுத்திலக்கியமாக இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பம்வரை எதையும் கூறுவதற்கில்லை.

### பிரசார எழுத்து

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் மலையக மக்களை தொடர்ந்தும் பயிர்ச் செய்கைகளில் ஈடுபடுத்த வேண்டியிருந்ததினால் பிரசார நோக்கில் கோப்பிக் கிருசிக் கும்மி என்றும் தேயிலைக் கிருசி கும்மி என்றும் பிரசுரங்கள் வெளியாகின.

“சுத்தமான சிலோன் தேயிலையைக் குடியுங்கள்” என்று பல்லாயிரக் கணக்காண துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. இவை பணம் கொடுத்து எழுதப்பட்ட பிரசார பிரசுரங்களாகும். .இந்தப் பிரசுரங்கள் தமிழ்த் தொழிலாளர்களைக் கவர்வதற்காக தோட்டத்துறை சார்ந்த நிர்வாக தமிழ் உத்தியோகத்தர்களால் எழுதப்பட்டவையாகும்.
1869 ஆம் ஆண்டு ஏ.ஜோசப் என்ற தோட்டக் கண்டக்டர் ஒருவரால் எழுதப்பட்ட கிருசிக்கும்மி யாழ்ப்பாணத்தில் பதிப்பிக்கப்பட்டு மலையக மக்களிடையே இலவசமாக விநியோகிக்கப்பட்டது.

### 1920 இல் மாற்றம்

இந்த மக்களின் கிணற்றில் விழுந்த கல்லாகக் கிடந்த வாழ்க்கையில் சலனம் ஏற்படத் தொடங்கியது 1920 களுக்குப் பிறகுதான். 1823 ஆம் ஆண்டில் இருந்து மாற்றத்தை 97 வருடங்களுக்குப் பிறகே காணக் கூடியதாக இருந்தது. அந்தளவுக்கு இந்த மக்கள் இறுக்கமான காலனித்தவ கட்டமைப்புக்களால் அடக்கி ஒடுக்கப்பட்டவர்களாக வைக்கப்பட்டிருந்தனர். தோட்டங்களில் வெளியார் எவரும் நுழைய முடியாத வகையிலும் கிராம மக்களுடன் தொடர்புகள் அற்ற மக்களாக வைக்கப்பட்டிருந்தனர்.

கோ.நடேச ஐயர் தோட்டங்களுக்குள் நுழைய

கடந்த இதழில் பிரசுரமான கட்டுரையின் தொடர்ச்சி...

முடியாத நிலையிலும் புடவை வியாபாரியாகத்தான் தோட்டங்கில் நுழைந்து மக்களைச் சந்தித்தார்.

அதுமாத்திரமல்ல நடேச ஐயர் தொழிற்சங்க அரசியல்வாதியாக மாறி ஆரம்பகாலத்தில் கொழும்பில் இருந்தே மலையகத்திற்குச் சென்று வந்தார். ஹட்டனில தொழிலாளர்கள் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகி அன்றைய தினமே கொழும்பு திரும்புவது வழக்கம். காலப் போக்கில் நீதிபதி நடேச ஐயர் ஆஜராகின்ற வழக்ககளை இரண்டு மணிக்குப் பிறகே விசாரணைக்கு எடுப்பார். கொழும்புக்கான கடைசி புகையிரதம் 1.30 க்கு அட்டனில் இருந்து புறப்பட்டுவிடும். எனவே அவர் கொழும்புக்கு வர முடியாது. தோட்டத் தொழிலாளர்கள் குடியிருக்கும் லயத்துக் காம்பிராவிலேயே தங்கிவிடுவார். இதன் காரணமாக நடேச ஐயர் மலையகத்திலேயே தனது மனைவியுடன் தங்கி தனது பணியினை மேற் கொண்டார்.

- இந்தக் காலப் பகுதியில் 1920க்குப் பிறகு 20க்கு மேற்பட்ட பத்திரிகைகள் தோற்றம் பெற்றன. இந்தப் பத்திரிகைகள் அனைத்தும் மலையக மக்களை தட்டி எழுப்பவதாகவே செயற்பட்டன.
தேசபக்தன் கோ.நடேச ஐயர் அவர்களின் இலங்கை இந்தியன் - சத்யமித்ரன் போன்ற பத்திரிகைகளின் பணி 1920 ஆம் ஆண்டிலிருந்து 1930ஆம் ஆண்டு வரையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

கோ. நடேச ஐயர் அவர்கள் மலையக மக்களிடையே தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு இலக்கியத்தை ஒரு சாதனமாக பயன்படுத்தினார்.
1924 இல் நடேசஐயர் தேசபக்தன் என்ற இதழைத் தொடங்கினார். அரசியலில் செல்வாக்குடன் அவர் இருந்த போதும் தேசபக்தனில் எழுதுவதை அவர் நிறுத்தவில்லை.

நடேச ஐயரின் இப்பெரும் பணியில் தோள் கொடுத்தவர் அவரின் மனைவி மீனாட்சி அம்மையார். தொழிலாளர்களுக்காக இருவரும் இணைந்து பாடிய “சட்டக் கும்மி” பாடல்கள் தொழிலாளர்களைத் தட்டி எழுப்பியது.

### புதிய மலையக ஆத்திசூடி

தேசபக்தன் இதழின் முகப்பில் புதிய மலையக ஆத்திசூடிப் பாடல்களை பதிப்பித்த கோ. நடேச ஐயர் அதனை இலங்கை முழுவதும் பரவச் செய்தார்.
அவர் எழுதிய நூல்கள் சில.
நீ மயங்குவதேன்? - கோ.நடேசய்யர் - 1931 -
4. இந்தியத் தொழிலாளர் துயரச் சிந்து - மீனாட்சி அம்மை.- 1931 - சகோதரி அச்சகம்
5. இந்தியத் தொழிலாளர் அந்தரப் பிழைப்பு நாடகம் - கோ.நடேச ஐயர் திருமதி கோ.ந.மீனாட்சியம்மாள். 1937 - கமலா பிரஸ்.
7. இந்தியர்களது இலங்கை வாழ்க்கையின் நிலைமை. மீனாட்சி அம்மையார்.1940 - கணேஸ் பிரஸ்
அதற்குப் பிறகு வீரகேசரி (1930) தினகரன்(1932) என்ற பத்திரிகைகளில் இந்தப் பணிகள் மேற் கொள்ளப்பட்டன.

- 1960 களில் மலையகத் தமிழ் இலக்கியம் புத்தெழுச்சி காணும் வரையில் அதாவது 1920 இல் இருந்து 1960 வரை மக்கள் மனம் தளர்ந்து போகாது அவர்களுக்கு உணர்வு ஊட்டி காத்தவர்கள் சிறு பிரசுரங்களும் அவற்றைப் பாடிக் காட்டிய பாடலாசிரியர்களுமாகும்.
- எஸ் ஆர் எஸ் பெரியாம்பிள்ளை பி.ஆர் பெரியசாமி மா.செ.ஜம்புலிங்கம் போன்றோறது பணி மக்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.
மலையக இலக்கிய பாரம்பரியத்தின் செல்வாக்கு மிகுந்த நாட்டுப்பாடலின் தாக்கத்திற்கு இவர்கள் ஆட்பட்டிருந்தனர். பொது மக்களை இவை பெரிதும் கவர்வதன.

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

## மலையக இலக்கியத்தில் புதிய இரத்தம்.

இதே கால கட்டத்தில் இலங்கை இலக்கிய உலகில் நவீன இலக்கியப் பரிச்சயங்களுடன் இனம் காட்டுவதில் சிவி.வேலுப்பிள்ளை சக்தீ அ. பாலையா கே.கணேஸ் ஆகியோர் முனைப்போடு செயற்பட்டனர்.

ஆங்கில புலமை பெற்ற இவர்கள் தமிழ் மொழியில் மாத்திரமன்றி ஆங்கிலப் பத்திரிகைகளிலும் எழுதினர்.

- எட்டியாந்தோட்டை சென் மேரிஸ் கல்லூரி தமிழ் விழாவில் கலந்து கொண்டு பேசிய மட்டக்களப்பு எஸ். பொன்னுத்துரை

"1948 ஆம் ஆண்டும் 1956ஆம் ஆண்டும் கொண்டுவரப்பட்ட குடியுரிமைச் சட்டமும் சிங்கள மொழிச் சட்டமும் தான் மலையக இலக்கியத்தை தேசிய இலக்கியமாக உருவாக்க உதவின" என்று குறிப்பிட்டார்.

## 1960 மலையக இலக்கியத்தின் எழுச்சிக் காலம்

- மலையக இலக்கியத்தில் 1960 ஆம் ஆண்டு காலப்பகுதி குறித்து வெகுவாகப் பேசப்படுவதை காணலாம்.

## ஈவேரா மற்றும் திராவிடச் செல்வாக்கு

- ஏனெனில் இந்தக் கால கட்டம் ஈவேரா மற்றும் திராவிடச் செல்வாக்கு மலையகத்தில் வியாபித்திருந்த காலம். அதே வேளையில் இடதுசாரிக் கருத்துக்களால் உள்வாங்கப்பட்டு இடதுசாரி தொழிங்சங்கங்களும் வீரியம் பெற்றிருந்த காலம். மறு வலமாக காந்தி மன்றம் அண்ணா மன்றம் நேரு மன்றம் எம்ஜியார் மன்றம் சிவாஜி மன்றம் என்பன கலை பண்பாட்டு அம்சங்களும் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டு மோகமும் மேலோங்கி இருந்தது.

- வீரகேசரி தினகரன் ஈழநாடு பத்திரிகைகளுடன் தமிழகத்திலிருந்து தினத்தந்தி தினமணி திராவிடக் கழக ஏடுகளான முத்தாரம் முரசோலி தென்றல் மாலைமணி கல்கி குமுதம் கல்கண்டு ஆனந்தவிகடன் போன்ற பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் பணம் கொடுத்து வாங்கிப் படித்தனர்.

## தமிழக செல்வாக்கை தடுத்து நிறுத்தும் இலங்கை அரசு.

-இந்த தமிழக செல்வாக்கை தடுத்துநிறுத்தவேண்டிய தேவை இலங்கை அரசுக்கும் ஆட்சியாளர்களுக்கும் இருந்தது. எனவே இலங்கை அரசு குறிப்பாக சிறிமாவோ பண்டாரநாயக்க இந்தியாவில் இருந்து பத்திரிகைகள் புத்தகங்கள் மற்றும் பிரசுரங்களைத் தடை செய்தது. உள்ளூர் இலக்கியங்களை மேம்படுத்துவதற்காகவும் பிரசுரங்களை ஊக்குவிப்பதற்காகவே இந்திய குறிப்பாக தமிழக பத்திரிகைகளுக்கும் பிரசுரங்களுக்கும் தடை விதிப்பதாக அப்போது கூறப்பட்டது.

இலங்கைஅரசாங்கத்தின
இந்தசெயற்பாடுவரவேற்கத்தக்கதாக இருந்தபோதும மலையகத்தின் மீது தீவிரமாகப் பரவிய திராவிடச் செல்வாக்கை வேரறுப்பதற்கே இலங்கை அரசினால் இந்தத் தடை கொண்டு வரப்பட்டது.

இதனால் நன்மை விளைந்தது என்பது மறுப்பதற்கில்லை. வீரகேசரி மனேஜராக இருந்த பாலச்சந்திரன் தமிழ் எழுத்தாளர்களைத் தேடிப்பிடித்து கதைகளையும் நாவல்களையும் பெற்று வீரகேசரிப் பிரசுரங்களாக வெளியிட்டார்.

வடக்கு கிழக்கு மலையகம்எனப்பலஎழுத்தாளர்களின் இலக்கியங்கள் சிறுகதைகளாகவும் நாவல்களாகவும் அச்சேறி மக்களின் கைகளுக்கு வந்தன. இதனை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த வீரகேசரி நிறுவனத்தின் விநியோக கட்டமைப்பு பெரிதும் உதவின.

## வீரகேசரிப் பிரசுரங்கள் பற்றி பேராசிரியர் நா.சுப்ரமணிய ஐயர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

நாற்பத்தைந்து நாவல்கள் வீரகேசரி பிரசுரங்களாகவும் பதின்மூன்று நாவல்கள் வீரகேசரியின் துணை வெளியீட்டு நிறுவனமான ஜனமித்திரன் பிரசுரங்களாகவும் அமைகின்றன என்ற உண்மை அண்மைக்காலத்தில் நாவல் வெளியீட்டுத்துறையிலே வீரகேசரி நிறுவனம் வகிக்கும் முக்கியத்துவத்தை உணர்த்துவதாக அமைகின்றது. இந்த எண்ணிக்கை அண்மைக்காலம் வரைப் பார்க்கும் போது எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## மு.நித்தியானந்தனின் வைகறை வெளியீடு.

மலையகத் தொகுப்பு என்ற ரீதியில் 1971 இல் எஸ். எம். கார்மேகம் கோவிந்தராஜ் எச்.எச்.விக்ரமசிங்க ஆகியோரின் முயற்சியில் வெளியான மலையகத்தின் முதல் சிறுகதைத் தொகுப்பான "கதைக்கனிகள்" நூலினை வீரகேசரியின் முதல் பிரசுரமாக நாம் கொள்ளலாம் என மு.நித்தியானந்தன் குறிப்பிடுகின்றார். எனினும் முதல் மலையகச் சிறுகதைத் தொகுப்பை வெளியிட்ட பெருமை அவர் ஆரம்பித்த வைகறை பிரசுரத்திற்கே உரியதாகும்.

மலையக எழுத்தாளர்களின் சிறு கதைகளின் தொகுப்பாக தெளிவத்தை ஜோசப்பின் "நாமிருக்கும் நாடே" என்.எஸ்.எம். இராமையாவின் "ஒரு கூடைக் கொழுந்து" சி.வி.வேலுப்பிள்ளையின் "வீடற்றவன்" என்பன வைகறைப் பிரசுரங்களாக வெளிவந்தன. இதற்குக் காரண கர்த்தாவாக இருந்தவர் மு.நித்தியானந்தன்.

இந்தத் தொகுதிகள் வெளி வர நித்தி சேருடன் அவ்வேளையில் யாழ் பல்கலைக் கழகத்தில் மாணவர்களாக இருந்த பாலசுப்ரமணியம் தேவராஜ் மூக்கையா நடராஜா ஜெயராமன் ஆகியோர் பக்க பலமாக இருந்து பணியாற்றியதை இவ்விடத்தில் நினைவு கூர விரும்புகின்றேன்.

## நண்பர் முருகபூபதி இவ்வாறு எழுதுகின்றார்.

"மு.நித்தியானந்தன் இல்லையென்றால் இராமையாவின் ஒரு கூடைக் கொழுந்து (1980 இல் தேசிய சாகித்திய விருது பெற்றது) சிறுகதைத் தொகுப்பை தமிழ் இலக்கிய உலகம் கண்டிருக்காது. நித்தி - தெளிவத்தை ஜோசப்பின் நாமிருக்கும் நாடே - சி..வி.வேலுப்பிள்ளையின் வீடற்றவன் முதலானவற்றையும் தனது வைகறை வெளியீடாகக் கொணர்ந்தார்.

என்.எஸ்.எம் மாத்திரம் அல்ல - அவரைப் போன்ற பல அற்புதமான மலையக இலக்கிய கர்த்தாக்கள் மலையக அரசியல் இயக்கங்களினால் அவற்றின் தலைவர்களினால் கண்டு கொள்ளப்படவில்லை. அவர்கள் கண்டுகொள்ள முயலவுமில்லை" என்று நண்பர் முருகபூபதி இராமையா மறைந்தபோது எழுதிய இரங்கலுரையில் குறிப்பிட்டுள்ளார்.

## லண்டனில் நூல் வெளியீடு.

மு.நித்தியானந்தன் அவர்களின் முயற்சியால் வெளிக் கொண்டு வரப்பட்ட மூன்று நூல்கள் எதிர்வரும் (ஏப்ரல்) 20 ஆம் 21 அம் திகதிகளில் லண்டனில் வெளியிடப்பட உள்ளன.

சி.வி.வேலப்பிள்ளையின் "எல்லைப்புறம்" என்ற நாவல் தெளிவத்தை ஜோசப் எழுதிய கதைகளின் தொகுப்பாக "தெளிவத்தை ஜேசப்பின் கதைகள்" என்ற தொகுப்பு நூல் மு.சிவலிங்கத்தின் கதைகள் அடங்கிய "ஒப்பாரிக் கோச்சி" என்ற மூன்று நூல்களே அவைகளாகும்.

சி.வி வேலப்பிள்ளையின் "எல்லைப்புறம்" என்ற நாவல் 1958 இல் எழுதப்பட்டது. இந்த நாவலை அவர் எழுத மூன்று வருடங்கள் பிடித்துள்ளன. டீழுசுனுநுசு டுயுனுே - எல்லைப்புறம். தோட்டப்புற மக்களுக்கும் கிராம மக்களுக்கும் இடையிலான பிரச்சனையை மையமாக வைத்து எழுதப்பட்ட நாவலாகும். இது ஏற்கனவே கனடா "தாய் வீடு" வெளியீடாக வெளி வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந் நூலுக்கான வெளியீட்டு விழாவினை மல்லியப்பு சந்தி திலகர் கொழும்பில் நடத்தியுள்ளாா.

"தெளிவத்தை ஜேசப்பின் கதைகள்" என்ற தொகுப்பு நூல் தெளிவத்தை ஜோசப் எழுதிய பெரும்பாலான கதைகளை உள்ளடக்கியதாகும். இந்த நூலில் 59 சிறு கதைகள் இடம்பெற்றுள்ளன. 450 பக்கங்களுடன் இந் நூல் வெளியாகியுள்ளது. தெளிவத்தை ஜோசப் உயிருடன் இருக்கும் பொழுதே இந்த நூலினை வெளிக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மு.நித்தியானந்தன் மீனா நித்தியானந்தன் மற்றும் விக்ரமசிங்க ஆகியோர் முயற்சித்த போதும் நூல் வெளி வருவதற்குள்ளேயே தெளிவத்தை ஜோசப் அவர்களை காலன் கவர்ந்து விட்டான்.

"ஒப்பாரிக் கோச்சி" என்ற நூல் மு.சிவலிங்கம் எழுதிய சிறு கதைகளின் தொகுப்பாக வெளிவந்துள்ளது. இந் நூலில் அவர் எழுதிய 16 சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன.

வைகறை பிரசுரத்திற்கப் பிறகு பல பிரசுரங்கள் மலையக இலக்கியத்தை வளர்த்தெடுத்தன. துரை விஸ்வநாதன் போன்ற பலர் தமது சொந்த பணத்தை முதலிட்டு மலையக எழுத்தாளர்களின் ஆக்கங்களை பிரசுரித்தனர்.

## பேராசிரியர் கைலாசபதி

பேராசிரியர் கா.கைலாசபதி அவர்கள் தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இருந்த போது மலையக எழுத்தாளர்களை ஊக்குவித்து எழுத வைத்துள்ளார். சி.வி.வேலுப்பிள்ளையின் படைப்புக்கள் பல தினகரனில் பிரசுரமாகின. சி.வி. வேலுப்பிள்ளை அவர்களின் ஆங்கிலக் கவிதைகளை பொன்.கிருஸ்ணசாமி மெழி பெயர்த்து தொடராக தினகரனில் வெளியிட்டார்.

அது மாத்திரமல்ல நாடகத்துறையில் அதிக ஆர்வம் காட்டிய என.எஸ்.எம்.இராமையாவின் நாடகத்தைப் பார்வையிட்ட பின் அவரைச் சந்தித்த கா.கைலாசபதி அவர்கள் சிறுகதைகள ̇எழுதுவதில ̇ஆர்வம் காட்டுமாறு கேட்டுக்கொண்டார். அதனையடுத்தே இராமையா அவர்கள் சிறுகதைகளை எழுதுவதில் கூடுதல் கவனம் செலுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதே போன்று சி.வி.வேலுப்பிள்ளை அவர்களை நாவல் எழுதுமாறு கா. கைலாசபதி அவர்கள் ஆலோசனை வழங்கினார். அதனை அடுத்தே சி.வி. வேலுப்பிள்ளை நாவலை எழுதத் தொடங்கினார். அந்த நாவல்தான் மூன்று வருட உழைப்பில் பிறந்த "எல்லைப்புறம்" நாவலாகும்.

## மலையக இலக்கிய கர்த்தாக்கள்.

நடேசஐயர் பத்திரிகையாளர் அரசியல்வாதி தொழிங்சங்கவாதி. குறிஞ்சித் தென்னவன் ஒரு தொழிலாளி. சாரல்நாடன் ஒரு தேயிலைத் தொழிற்சாலை அதிகாரி. தெளிவத்தை ஜேசப் ஒரு தோட்டப்பாடசாலை ஆசிரியர். பின்னாளில் ஸுவயச வழககநந நிறுவனத்தில் அக்கவூண்டனாக பணிபுரிந்தார். சி.வி.வேலுப்பிள்ளை ஒரு கவிஞன் சிறுகதை எழுத்தாளன் அரசியல்வாதி நாடாளுமன்ற உறுப்பினர் பத்திரிகை ஆசிரியர். என்.எஸ்.எம் இராமையா தோட்டத்தில் எக்கவூண்டனாக் பணி புரிந்து பின்னாளில் கொழும்பில் இரும்புக் கடையில் அக்கவுண்டனாகப் பணி புரிந்தவர். மல்லிகை.சி.குமார் கால்நடை மருத்துவமனையில் பணியாற்றியவர்.

(தொடர்ச்சி அடுத்த இதழில)

# தமிழ்த் தேசத்தைத் திரட்ட வேண்டிய பொறுப்பு தமிழ்ப் பொது வேட்பாளராக வருபவருக்கு உண்டு



இலங்கையில் எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொது வேட்பாளருக்காகத் திரட்டப்படும் வாக்குகள் அத்தகையவை அல்ல அவை தேசத்துக்காகத் திரட்டப்படும் வாக்குகள். எனவே தன் சொந்தக் காசைச் செலவழித்து,அர்ப்பணித்து, இரவு பகலாக உழைத்து ஒரு பொது வேட்பாளரை வெற்றி பெறச்செய்ய வேண்டும். அவர் தேர்தலில் வெற்றி பெற மாட்டார். அவர் ஜனாதிபதியாகவும் வர மாட்டார். ஆனால் அவர் இரண்டு விடயங்களைச் செய்வார்.ஒன்று, பிரதான தென்னிலங்கை வேட்பாளர்களின் வெற்றியை சவால்களுக்கு உட்படுத்துவார். அதைவிட முக்கியமாக, அவர் தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவார். தமிழ் மக்கள் ஒரு தேசமாகத்திரண்டு விட்டார்கள் என்ற செய்தியை தமிழ் மக்களுக்கும் உலகத்துக்கும் அவர் உணர்த்துவார்.

இதேவேளை. கடந்த வாரம் ஜனாதிபதி யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார்.பல்வேறு நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்ட அவர் நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனின் வீட்டுக்கும் சென்றார்.அது விக்னேஸ்வரனுக்குக் கொடுக்கப்பட்ட மரியாதைதான்,அதேசமயம் சந்திப்பின்போது அவர் சுட்டிக்காட்டிய முக்கியமான விடயங்களில் ஒன்று,தமிழ்ப் பொது வேட்பாளர் பற்றியதாகும்.ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தக்கூடிய அளவுக்கு தமிழ்க் கட்சிகள் ஐக்கியப்படுமா என்று அவர் விக்னேஸ்வரனிடம் கேட்டிருக்கின்றார்.

அணில் அந்தக் கேள்வியை விக்னேஸ்வரனிடம் கேட்டது தற்செயலானது அல்ல.அதுவும் வீடு தேடிப் போய்க் கேட்டது தற்செயலானது அல்ல. விக்னேஸ்வரன் ஏற்கனவே பொது வேட்பாளர் தொடர்பாகப் பேசி வருகின்றார்.அவ்வாறு பொது வேட்பாளராக நிற்பதற்குத் தான் தயார் என்றும் அவர் அறிவித்திருந்தார்.பொது வேட்பாளராக நிற்கப் போகின்றவர் சிங்களம் தெரிந்தவராக இருப்பது நல்லது என்றும் அவர் பேசியிருக்கிறார். அவர் சிங்கள மக்களுக்கு தமிழ் மக்களின் நியாயங்களை எடுத்துகூற வேண்டும் என்பதே அவருடைய எதிர்பார்ப்பு. ஆனால் அவ்வாறு ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதற்குத் தமிழ்க் கட்சிகள் ஐக்கியப்பட்டு ஒரு முடிவை எடுக்காது என்று ரணில் விக்கிரமசிங்க விக்னேஸ்வரனிடம் கூறியிருக்கிறார்.ஏன் அவர் அப்படிக் கூறினார்?ஏனெனில் அந்த முயற்சியை முன்னெடுத்துவரும் அரசியல்வாதிகளில் ஒருவராகிய விக்னேஸ்வரன் அதைத் தனக்கு விடுக்கப்பட்ட ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு மேலும் தீவிரமாக அதில் ஈடுபடலாம் என்று உள்நோக்கம் ரணிலிடமிருந்து இருக்கலாம்.

ஏனெனில்,ஒரு தமிழ்ப் பொது வேட்பாளர் முன்னிறுத்தப்பட்டால்,அவர் பெருமளவுக்கு சஜித் பிரேமதாசாவுக்கு சேரக்கூடிய வாக்குகளை பறித்து விடுவார் என்ற எதிர்பார்ப்பு பொதுவாக உண்டு. ஏனெனில் தமிழரசுக் கட்சி சஜித் பிரேமதாசாவை ஆதரிக்கக்கூடிய வாய்ப்புகள் அதிகம் உண்டு.அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.பொதுவாக தமிழரசுக் கட்சியுஎன்பிக்குச்சாய்வானது.அடுத்தகாரணம்,ரணில் விக்கிரமசிங்க இப்பொழுது ராஜபக்சக்களின் தயவில் தங்கியிருப்பவர்.கடந்த 15 ஆண்டுகளிலும் நடந்த மூன்று ஜனாதிபதி தேர்தல்களின் போதும் தமிழ் மக்கள் ராஜபக்சங்களுக்கு எதிராக ஒன்றுபட்டு நின்றார்கள்.இந்த முறையும் அவர்கள் அவ்வாறு ஒன்றுபட்டு நின்றால் தமிழ் வாக்குகள் ரணிலுக்கு கிடைக்கும் வாய்ப்புகள் குறைவு.படித்த ஆங்கிலம் பேசும் உயர்வர்க்கம் ரணிலுக்கு வாக்களிக்கக்கூடும். பொருளாதாரம் நெருக்கடியில் இருந்து அவர் நாட்டை மீட்டெடுத்து இருக்கிறார் என்ற அபிப்பிராயம் தமிழ்,சிங்கள,முஸ்லிம் உயர் வர்க்கத்தினர் மத்தியில் உண்டு.

எனவே அந்த வாக்குகள் தனக்கு கிடைக்கும் என்று ரணில் நம்புகின்றார்.விக்னேஸ்வரனும் அந்த உயர் வர்க்கத்தைச் சேர்ந்தவர்தான். இந்த அடிப்படையில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட்டால் அவர் சஜித் பிரேமதாசாவுக்குத்தான் பாதகமாக இருப்பார்.அவர் சஜித்தின் வெற்றியை கேள்விக்கு உள்ளாக்குவார்.இப்பொழுது கிடைக்கும் ஆகப்பிந்திய புள்ளிவிபரங்களின்படி ஜனாதிபதித் தேர்தலில் சஜித் அதிகம் வெல்லக்கூடிய வாய்ப்புகளைக் கொண்டிருக்கிறார்.அவருக்கு அடுத்தபடியாக அனுர. மூன்றாவதாகத்தான் ரணில் காணப்படுகிறார்.ஆனால் இலங்கை போன்ற நாடுகளில் தேர்தல் நடப்பதற்கு சில நாட்களுக்கு முன் அல்லது சில கிழமைகளுக்கு முன் காட்சி தலைகீழாக மாறுவது உண்டு. ரணில் விக்ரமசிங்க என்ற புத்திசாலி,சந்திரசாலி என்னென்ன தந்திரங்களைச் செய்வார் என்பதைப் பொறுத்திருந்து பார்க்கவேண்டும்.அதிலும் குறிப்பாக அவர் ஆட்சிக்கு வருவதைத் தான் மேற்கத்திய நாடுகள்,ஐநா,பன்னாட்டு நாணய நிதியம் போன்றனவும் விரும்புவதாகத் தெரிகிறது.

எனவே விக்னேஸ்வரனே வீடு தேடிச் சென்று ரணிலுக்குக்கூறிய செய்தி என்பது சஜித்தை தோற்கடிக்கும் நோக்கிலானது என்றும் எடுத்துக் கொள்ளலாம்.ரணில் அதை எந்தத் தந்திர நோக்கத்தோடும் கூறியிருக்கலாம்.ஆனால் அதை அவர் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் அதுதான் உண்மை. தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் குடிமக்கள் சமூகங்களுக்கு இடையே காணப்படும் ஐக்கியம் கட்சிகளுக்கு இடையே கிடையாது.

சில விவகாரங்களை மையப்படுத்தி தமிழ் கட்சிகளை ஒன்றிணைக்கலாம். மற்றும்படி கட்சிகள் கட்சிகளாகவே இருக்கின்றன.அவை தங்களுடைய வாக்கு வங்கியை கட்டி எழுப்புவதில்தான் கவனமாக இருக்கின்றன.கடந்த 15 ஆண்டு கால தமிழ் அரசியலானது அப்படி ஒரு அரசியல் கலாச்சாரத்தில்தான் தடம்பதித்து நிற்கின்றது. அதாவது கட்சிமைய அரசியல்.கடந்த 15 ஆண்டுகளாக கட்சிகளின் உறுப்பினர்கள் மக்கள் மத்தியில் வாக்கு கேட்கும் பொழுது தங்களுக்கு என்றுதான் வாக்குகளைச் சேகரித்தார்கள்.அல்லது ஆகக்கூடியபட்சம் கட்சிக்கென்று வாக்குகளைச் சேகரித்தார்கள் என்றும் சொல்லலாம்.ஆனால் விகிதாசார பிரதிநிதித்துவத்தின் கீழ் ஒரு கட்சி வாக்காளரே தனது சக கட்சி வாக்காளருக்கு எதிராக செயல்படும் நிலைமைகளும் அதிகமாகக் காணப்பட்டன.

இப்படிப்பட்ட ஒரு பின்னணியில் தனக்கென்று காசு செலவழித்து தனக்கென்று இரவு பகலாக உழைத்து வாக்குத் திரட்டும் ஒரு தேர்தல் மையப் பண்பாட்டில் தேசத்துக்காக வாக்கை திரட்ட எத்தனை அரசியல்வாதிகள் தயார்? ஏனென்றால் தமிழ்ப் பொது வேட்பாளருக்காகத் திரட்டப்படும் வாக்குகள் ஒரு தேசத்துக்கானவை.ஒரு தனி நபருக்கானவை அல்ல. அங்கு ஒரு தனிநபர் வேட்பாளராக நிறுத்தப்படுவார்.ஆனால் அவர் எந்த ஒரு கட்சியையும் பிரதிநிதித்துவப்படுத்த மாட்டார்.எந்த ஒரு சமயத்தையோ அல்லது சாதியையோ அல்லது பிராந்தியத்தையோ அவர் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடாது.அவர் தமிழ்த் தேசிய ஐக்கியத்தின் குறியீடாக நிப்பார்.அவர் ஒரு பிரமுகராகக்கூட இருக்கவேண்டும் என்று இல்லை.அவர் தமிழ் மக்களின் ஐக்கியத்தைப் பிரதிபலிப்பார்.அல்லது தமிழ் மக்களின் பொது நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கும் ஓர் அடையாளம். அவ்வளவுதான்.

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

அவ்வாறு தேர்தலில் போட்டியிடும் தமிழ் வேட்பாளர் அந்தத் தேர்தல்மூலம் தனக்குக் கிடைக்கும் பிரபல்யத்தையும்பலத்தையும் எதிர்காலத்தில் கட்சித் தேவைகளுக்காகப் பயன்படுத்தக் கூடாது என்ற ஒரு உடன்படிக்கை அவரோடு எழுதப்பட வேண்டும் என்று சிவில் சமூகங்கள் எதிர்பார்க்கின்றன.எனவே ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப்படக்கூடிய ஒரு தமிழ்ப்பொது வேட்பாளர் எனப்படுகின்றவர்,தனக்காக வாக்குக் கேட்கப் போவதில்லை.ஒரு கட்சிக்காக வாக்குக் கேட்கப் போகவில்லை. தமிழ் ஐக்கியத்திற்காகத்தான் வாக்குக் கேட்பார். தமிழ்ப் பொது நிலைப்பாட்டுக்காகத்தான் வாக்குக்குக் கேட்பார்.இன்னும் அழுத்தமாகச் சொன்னால் தமிழ்த்தேசிய ஐக்கியத்துக்காக அவர் வாக்குகளைத் திரட்டுவார்.

இது கடந்த 15 ஆண்டுகளாகப் பெரிய அளவில் காணப்படாத ஒரு போக்கு. ஒரு தனி நபருக்காக,தனி அரசியல்வாதிக்காக,தனி நாடாளுமன்ற உறுப்பினருக்காக,அல்லது மாகாணசபை உள்ளூராட்சிசபை உறுப்பினருக்காக, வாக்குத் திரட்டும் ஒரு பண்பாட்டில் இருந்து இது முற்றிலும் மாறானது.தேசத்துக்காக வாக்குத் திரட்டுவது. அப்படியென்றால்,இங்கு செலவழிக்கப்படும் காசு தை செலவழித்தவருக்குத் திரும்பி வராது. ஒவ்வொரு தேர்தலின்போதும் அரசியல்வாதிகள் காசைச் செலவழிக்கும் பொழுது, அந்தக் காசு எப்படித் தங்களுக்கு லாபமாக வரும் என்றுதான் சிந்திப்பார்கள்.அதை ஒரு முதலீடாகத்தான் அவர்கள் பார்ப்பார்கள்.அது ஒரு தனிநபர் தனக்காக முதலீடு செய்யும் காசு.தனக்காக முதலீடு செய்யும் உழைப்பு. ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொது வேட்பாளருக்காகத் திரட்டப்படும் வாக்குகள் அத்தகையவை அல்ல அவை தேசத்துக்காகத் திரட்டப்படும் வாக்குகள். எனவே தன் சொந்தக் காசைச் செலவழித்து,அர்ப்பணித்து, இரவு பகலாக உழைத்து ஒரு பொது வேட்பாளரை வெற்றி பெறச்செய்ய வேண்டும். அவர் தேர்தலில் வெற்றி பெற மாட்டார். அவர் ஜனாதிபதியாகவும் வர மாட்டார். ஆனால் அவர் இரண்டு விடயங்களைச் செய்வார். ஒன்று, பிரதான தென்னிலங்கை வேட்பாளர்களின் வெற்றியை சவால்களுக்கு உட்படுத்துவார். அதைவிட முக்கியமாக, அவர் தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவார். தமிழ் மக்கள் ஒரு தேசமாகத்திரண்டு விட்டார்கள் என்ற செய்தியை தமிழ் மக்களுக்கும் உலகத்துக்கும் அவர் உணர்த்துவார்.

அவ்வாறு தேசத்துக்காக வாக்குத்திரட்டும் ஒரு தேர்தல் மையப் பண்பாடு என்பது,தமிழ் அரசியலில் கடந்த 15 ஆண்டுகளாக மிகக்குறைந்த அளவே மிகப் பலவினமான ஒரு போக்காகவே காணப்பட்டது.ஆனால் தமிழ்ப் பொது வேட்பாளர் என்று தெரிவு அதனை ஒரு பொதுப் போக்காகவும் பலமான போக்காகவும் மற்றும் நோக்கத்தைக் கொண்டது.இந்த விடயத்தில் கட்சிகள் தமது கட்சி நலன்களைக் கடந்து,தனிநபர் ஆதாயங்களை கடந்து, ஒரு தேசத்துக்காக ஒன்றுதிரளவும் உழைக்கவும் வேண்டியிருக்கும்.ஒரு தேசத்துக்காகத் தங்கள் சொந்தக்காசைச்செலவழிக்கவும்தியாகம்செய்யவும் அர்ப்பணிப்புகளுக்கு தயாராகவும் இருக்கவேண்டும். அவர்கள் அப்படித் தயாராக இருந்தால்,சிவில் சமூகங்களின் வேலை இலகுவாகிவிடும், சிவில் சமூகங்கள் திட்டமிடுவதுபோல கட்சிகளும் குடிமக்கள் சமூகங்களும் இணைந்த ஒரு பொதுக் கட்டமைப்பை வெற்றிகரமாக உருவாக்கலாம். அந்த பொதுக்கட்டமைப்பு,கட்டமைப்புரீதியாக ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகளை முன்னெடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

எனவே ரணில் விக்னேஸ்வரனிடம் முன்வைத்த சவால் என்பது அவருடைய தனிப்பட்ட வெற்றி இலக்கை நோக்கமாகக் கொண்டது.தன் எதிரியைத் தோற்கடிக்கும் தந்திரங்கள் மிகுந்தது.ஆனால் தமிழ் மக்கள் அதனை எதிர்கொள்ளும்போது அது யாரையும் தோற்கடிப்பது அல்லது யாரையும் வெற்றி பெற வைப்பது அல்லது யாரோடும் பேரம் பேசுவது என்ற நோக்கங்களைக் கொண்டதாக இருக்கக்கூடாது.மாறாக தமிழ்மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவதுசிதறிக் கிடக்கும் தமிழ் மக்களை ஓரணியில் திரட்டுவது என்ற உயர்ந்த நோக்கத்தைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

இதுவரையிலும் தமிழ் மக்கள் கூட்டணி, ஈ.பி.ஆர். எல்.எப். தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆகிய கட்சிகள்தான் பொது வேட்பாளர் என்ற சிவில் சமூகங்களின் நிலைப்பாட்டை ஆதரிக்கின்றன. ஏனைய கட்சிகளும் கூட்டுக்களும் இனிமேல்தான் தங்களுடைய நிலைப்பாட்டை வெளிப்படையாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கக்கூடும்

ஆனால்அதற்காக அதிக காலம் எடுத்தால்,அதுதமிழ்ப் பொது வேட்பாளர் என்ற பொது நிலைப்பாட்டைக் கட்டியெழுப்புவதைச் சவால்களுக்கு உள்ளாக்கும். ஏனென்றால் தேசத் திரட்சியைப் பாதுகாப்பது என்பது எப்போதோ தொடங்கப்பட்டிருக்க வேண்டும்.

-நிலாந்தன்

# “தமிழ்நாட்டில் உள்ள ஈழத்தமிழ் அகதிகளின் பிள்ளைகளின் உயர்கல்வியைத் தொடரும் வகையில் கட்டுப்பாடுகள் சிலவற்றை தளர்த்தி அவர்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக ஆக்குங்கள்”

## உதயன் விருது விழாவில் சிறப்பு விருந்தினராக வருகை தந்தை கனடாவிற்கான துணைத்தூதுவரிடம் கோரிக்கை

(றொறன்ரோவிலிருந்து செய்தியாளர் அதிசயா)



“இலங்கையிலிருந்து இராணுவக் கெடுபிடிகளிலிருந்து உயிர் தப்புவதற்காக இந்தியா சென்று அங்கு தமிழ்நாட்டில் பல ஆண்டுகளாக வாழும் எமது ஈழத்தமிழ் சொல்லொனா துன்பங்களுக்கு ஆளாகி வருகின்றார்கள். எனினும் அவர்கள் தங்கள் குடும்பத்தை கவனமாகக் கவனித்து தங்கள் பிள்ளைகளுக்கும் கல்வி அறிவூட்டும் வகையில் தங்களை அர்ப்பணித்துள்ளார்கள். இந்த பெற்றோர்களான அகதிகளின் பிள்ளைகள் அங்கு பரீட்சைகளில் அதிக புள்ளிகளைப் பெற்றும் பல்கலைக் கழகங்கள் அல்லது கல்லூரிகளில் உயர் கல்வியைப் பெறமுடியாமல் அவர்களது அகதிகள் என்ற அந்தஸ்த்து தடுத்துவருகின்றது. மேற்படி திறமை வாய்ந்த பிள்ளைகளின் உயர்கல்வியைத் தொடரும் வகையில் பல கட்டுப்பாடுகள் உள்ளன. எனவே மேற்படி கட்டுப்பாடுகள் சிலவற்றை தளர்த்தி எமது உறவுகளின் பிள்ளைகளின் எதிர்காலத்தை ஒளிமயமாக ஆக்குவதற்கு தங்களால் ஆன உதவிகளைச் செய்யுங்கள்”

இவ்வாறு கடந்த ஞாயிற்றுக்கிழமை ஸ்காபுறோவில் நடைபெற்ற உதயன் சர்வதேச விருது விழாவில் சிறப்பு விருந்தினராக வருகை தந்தை கனடாவிற்கானஇந்தியாவின் துணைத்தூதுவர் கௌரவ சித்தார்த் அவர்களிடம் கோரிக்கை விடுக்கையில் உதயன் பிரதம ஆசிரியரும் உதயன் விருதுகள் அறக்கட்டளையின் தலைவருமான ஆர். என். லோகேந்திரலிங்கம் வேண்டுகோள்விடுத்தார்.

அங்கு சிறப்பு விருந்தினராக அழைக்கப்பெற்றிருந்த கனடாவிற்கான இந்தியாவின் துணைத்தூதுவர் கௌரவ சித்தார்த் அவர்கள் ‘உதயன்’ சர்வதேச விருதுகள் வழங்கும் விழாவில் உரையாற்றும் போது இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட தமிழர்கள் கனடாவில் தங்கள் இருப்பைத் தக்க வைத்துக்கொள்வதற்காக இயன்றளவு உழைத்து வருகின்றார்கள். அத்துடன் அவர்கள் பல்வேறு துறைகளில் முன்னேற்றத்தை அடைந்துள்ளார்கள். அதற்கு மேலாக தமிழ் மொழி சார்ந்த ஊடகங்களின் பங்களிப்பையும் நான் நன்கு அறிவேன். வானொலிகள் மற்றும் அச்சு ஊடகங்கள் தங்கள் பணிகளை சிறப்பாக ஆற்றிவருகின்றன. குறிப்பாக கனடா உதயன் பத்திரிகை மற்றும் அதன் இணையத்தளம் ஆகியவை தொடர்பாக எமது தூதுவராலயத்தில் பணியாற்றும் பலர் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார்கள்’ என்று புகழாரம் சூட்டினார்.



அதன் பின்னர் அவருக்கு நன்றி தெரிவித்து உரையாற்றியபோதே உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் மேற்கண்டவாறு “தமிழ்நாட்டில் பல ஆண்டுகளாக வாழும் எமது ஈழத்தமிழ் சொல்லொனா துன்பங்களுக்கு ஆளாகி வருகின்றார்கள். அவர்கள்பிள்ளைகள் அங்கு பரீட்சைகளில் அதிக புள்ளிகளைப் பெற்றும் பல்கலைக் கழகங்கள் அல்லது கல்லூரிகளில் உயர் கல்வியைப் பெறமுடியாமல் அவர்களது அகதிகள் என்ற அந்தஸ்த்து தடுத்துவருகின்றது” என்று தெரிவித்தார். அதற்கு பதிலளிக்கையிலும் துணைத்தூதுவர் சாதகமான கருத்துக்களைத் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மக்களால் பாராளுமன்றம் அனுப்பப்படுவோர் தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை பெற்றுக்கொடுத்திருக்கின்றார்களா என்பது தொடர்பில் அறிந்து கொள்வது அவசியம்.

மக்களால் தமது பிரதி நிதிகளாக பாராளுமன்றம் அனுப்பப்படுவோர் தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களுக்கான உரிமைகளை,அபிலாஷைகளை, தேவைகளை ,தமது மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள், நெருக்கடிகளை இப் பாராளுமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்திருக்கின்றார்களா? தீர்வுகளை பெற்றுக்கொடுத்திருக்கின்றார்களா என்பது தொடர்பில் மக்கள் கண்டிப்பாக ஆராய ,அறிந்து கொள்ள வேண்டிய தேவையுள்ளது.

கே.பாலா

நாட்டில் ஜனாதிபதித் தேர்தலா அல்லது பாராளுமன்றத் தேர்தலா முதலில் நடக்கும் என்ற வாதப் பிரதிவாதங்கள் நடக்கும் நிலையில் ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ள ஜனாதிபதி வேட்பாளர்களும் பாராளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ள தற்போதைய எம்.பி.க்கள்,முன்னாள் எம்.பி.க்கள் , தாமும் ஒரு எம்.பி.யாக வேண்டுமென விரும்புவோரும் தயாராகி வரும் நிலையில் பாராளுமன்றத்திற்கு இவர்களை அனுப்பி வைக்கும் வாக்காளர்களான மக்கள் "வாக்கு'எனும் தமது ஆயுதத்தை பயன்படுத்தும் போது பாராளுமன்றம் தொடர்பிலும் அங்கு தம்மால் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்ட எம்.பி.க்கள் தமது மக்களுக்காக செயற்பட்ட விதம் தொடர்பிலும் நன்கு அறிந்து வைத்திருக்க வேண்டியது அவசியம்.

நாட்டில் பாராளுமன்றத்துக்கான தேர்தல் நடக்கும் போது தங்களின் கருத்துக்களைத் தேர்தலின் மூலம் பதிவு செய்து, தங்கள் சார்பில் ஒவ்வொரு இன மக்களும் தமது பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்து பாராளுமன்றத்தில் தமது குரலாக ஒலிப்பதற்காக நம்பிக்கையுடன் அனுப்பி வைப்பர். இவ்வாறு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்




தனிக்கட்சியாகவோ அல்லது மற்ற கட்சிகளுடன் அல்லது அரசுடன் சேர்ந்து தமது மக்களின் நலன்களுக்காக செயற்படவேண்டும். தம்மை மக்கள் ஏன் பாராளுமன்றத்திற்கு அனுப்பினார்கள் என்பதை உணர்ந்தும், தமக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றிக்கடன் செலுத்துவதற்கும் மக்கள் தமக்குக் கொடுத்த உயர்நிலை வாழ்க்கைக்கு பிரதி உபகாரமாகவேனும் அந்த மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளையாவது பாராளுமன்ற சிறப்புரிமைகளுக்கு ஊடாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும்.ஆனால் அவ்வாறானதொரு தமது மக்களுக்கான செயற்பாடுகளை தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்களிடையே காண முடியவில்லை.

மக்களால் தமது பிரதி நிதிகளாக பாராளுமன்றம் அனுப்பப்படுவோர் தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களுக்கான உரிமைகளை,அபிலாஷைகளை, தேவைகளை ,தமது மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள், நெருக்கடிகளை இப் பாராளுமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்திருக்கின்றார்களா? தீர்வுகளை பெற்றுக்கொடுத்திருக்கின்றார்களா என்பது தொடர்பில் மக்கள் கண்டிப்பாக ஆராய ,அறிந்து கொள்ள வேண்டிய தேவையுள்ளது.

இலங்கைப் பாராளுமன்றத்திலுள்ள 225 எம்.பி.க்களில் 196 எம்.பி.க்கள் 22 தேர்தல் மாவட்டங்களிலிருந்து பொது வாக்கெடுப்பின் மூலமும், மிகுதி 29 எம். பி.க்கள் தேசிய அளவில் கட்சிகள் பெறும் வாக்கு எண்ணிக்கைக்கேற்ப கட்சிகளின் தேசியப் பட்டியலிருந்தும் தெரிவு செய்யப்படுகின்றனர். தற்போது பாராளுமன்றத்தில் உள்ள 15 சிங்கள,தமிழ், முஸ்லிம்,மலையக அரசியல் கட்சிகளை பிரதி நிதித்துவப்படுத்தி 176 சிங்கள எம்.பி.க்களும் 21 முஸ்லிம் எம்.பி.க்களும் 19 தமிழ் எம்.பி.க்களும் 9 மலையக தமிழ் எம்.பி.க்களுமாக 225எம்.பி.க்கள் உள்ளனர்.

(தொடர்ச்சி 9ம் பக்கம்)



(தொடர்ச்சி 8ம் பக்கம்)

இந்த நான்கு வகை மக்கள் பிரதிநிதிகளான எம்.பி.க்களில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளான எம்.பி.க்களே மிகவும் பலவீனமான நிலையிலும் செயற்படாத் தன்மையிலும் தமது சுய தேவைகளை மட்டும் நிறைவேற்றிக்கொள்ளும் குறுகிய அரசியல் நோக்கம் கொண்டவர்களாகவும் தமது மக்கள் பற்றிய அக்கறையற்றவர்களாகவும் வெறுமனே உணர்ச்சிகரமான உரைகளை மட்டும் ஆற்றுபவர்களாகவும் உள்ளனர். சரி இவர்கள் எந்த வகையில் தமது மக்கள் தொடர்பில் அக்கறையற்று செயற்படுகின்றனர் என்பதனை பார்ப்போம்.

பாராளுமன்றத்தை பொறுத்தவரையில், எம்.பி.க்களுக்கு பல்வேறு சிறப்புரிமைகள் உள்ளன. தம்மைத் தெரிவு செய்த மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை, நியாயங்களைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய வசதி வாய்ப்புகள் பல இருக்கின்றன. பாராளுமன்ற அமர்வுகளின் போது மனுக்கள் சமர்ப்பணம் அல்லது வாய்மூல விடைக்கான வினாக்களுக்கான நேரம் அல்லது சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை, தனி உறுப்பினர் பிரேரணை அல்லது 27ஃ2 இன் அடிப்படையில் முன்வைக்கப்படும் விசேட கூற்று அல்லது பிரதமரிடத்திலான நேரடிக் கேள்வி நேரம் என தமது மக்களின் பிரச்சினைகளை சபையின் கவனத்திற்கு கொண்டுவர பல வாய்ப்புகள் உள்ளன .

தான் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் எதிர்நோக்கும் நிர்வாக ரீதியான பிரச்சினைகளுக்கு பாராளுமன்ற உறுப்பினராக உள்ள ஒருவர் பாராளுமன்றத்திற்கு அவ்வாறான நிர்வாக ரீதியான பிரச்சினைகளை எதிர்கொள்ளும் நபர் தொடர்பான மனுக்களைச் சமர்ப்பிக்க முடியும். அது காணிப் பிரச்சினை, நஷ்டஈட்டுப் பிரச்சினை, ஓய்வூதியப் பிரச்சினை.இடமாற்றப்பிரச்சினை,பதவி உயர்வுப்பிரச்சினை ,அரசியல் பழிவாங்கல் பிரச்சினை என எதுவாகவும் இருக்க முடியும். அவ்வாறு மனுவைச் சமர்ப்பிக்கும் போது அந்த மனு பரிசீலனைக்காக பொது மனுக்கள் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு குறிப்பிட்ட காலத்திற்குள் தீர்வுகள் அல்லது அதற்கான பதில்கள் அதனுடன் தொடர்புபட்ட அமைச்சரினால் பெற்றுக் கொடுக்கப்படும்.

அதேபோன்று, வாய்மூல விடைக்கான வினா நேரத்தின் போது பிரதமர் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களிடம் தமது மக்களின் பிரச்சினை அல்லது தமது பிரதேசத்தின் பிரச்சினை அல்லது தமது மாவட்ட , மாகாணத்தின் பிரச்சினை அல்லது ஏதாவது ஒரு விடயம் தொடர்பில் ஒரு எம்.பி.பாராளுமன்றம் கூடும் நாட்களில் ஒரு நாளில் இரண்டு வினாக்களை எழுப்ப முடியும். இந்த இரண்டு வினாக்களிலும் துணை வினாக்களாக தலா இரு வினாக்களை எழுப்ப முடியும். இவ்வாறான வினாக்களுக்கு சம்பந்தப்பட்ட அமைச்சரோ இராஜாங்க அமைச்சரோ பிரதி அமைச்சரோ கண்டிப்பாகப் பதில் வழங்க வேண்டும். சில வேளைகளில் கால அவகாசம் கோரினாலும் அக்கேள்விக்கு அவர்கள் பதிலளித்தே ஆகவேண்டும். பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட கேள்வியாக இருந்தால் மட்டும் சில வேளைகளில் பதில் வழங்கப்படமாட்டாது.

இதேபோன்றுதான் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை. பாராளுமன்ற சபை அமர்வு மீண்டும் அடுத்து வருகின்ற ஒரு திகதிக்கு சபை ஒத்திவைக்கப்படும் போது கொண்டு வரப்படுவதே சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை. இது பொது முக்கியத்துவம் வாய்ந்த, அவசரம் கருதிய விடயம் ஒன்றின் மீது குறுகிய அறிவித்தலில் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையாக பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரால் கொண்டுவர முடியும்.இதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர் பதில் அல்லது தீர்வு வழங்க வேண்டும்.

தனிநபர் பிரேரணையும் இதுபோன்ற ஒன்றுதான்.இப் பிரேரணையும் விவாதத்திற்கு எடுக்கப்பட்டு அதற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சரினால் பதிலும் தீர்வுகளும் வழங்கப்படும்.இவற்றைவிட கட்சித் தலைவர் ஒருவரினால் 27ஃ2 இன் அடிப்படையில் முன்வைக்கப்படும் விஷேட கூற்று மிகமுக்கியமானது. பொதுமக்களின் ,நாட்டின் முக்கியம் கருதிய விடயங்கள் தொடர்பில் சபையில் கவனத்திற்குக் கொண்டுவந்து அது தொடர்பான பதிலையும், தீர்வையும் இதன்மூலம் பெற்றுக் கொள்ள முடியும்

ஆனால் இவ்வாறான எந்தவொரு சிறப்புரிமைகளையும், வாய்ப்புகளையும் தமிழ் எம்.பி.க்கள் பயன்படுத்துவது அரிதிலும் அரிதாகவே உள்ளது.சில வேளைகளில் வாய் மூல விடைக்கான வினாக்களில் இவர்கள் கேள்விகளைக் கேட்டிருந்தாலும் கேள்விக்கான நேரத்தின் போது சபையில் இருப்பதில்லை.தற்போது பாராளுமன்ற அமர்வுகள் நேரடி ஒளிபரப்பு செய்யப்படுவதால் மக்களால் இதனை நன்றாக அவதானிக்க முடியும் .



முஸ்லிம் மற்றும் மலையகத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளான எம்.பி.க்களை பொறுத்த வரையில் அவர்கள்பலமானநிலையிலேயேஉள்ளனர்.அவர்கள் அமைச்சரவை அமைச்சர்களாகவும்,இராஜாங்க அமைச்சர்களாகவும் பிரதி அமைச்சர்களாகவும் இருந்து கொண்டு தமது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுக்கொடுக்கின்றனர் .

பாராளுமன்றத்தைப் பொறுத்தவரை தமிழ் எம்.பி.க்கள் 19 பேர் இருந்தாலும் இவர்களில் ஒரு அமைச்சரவை அமைச்சரும் ஜடக்ளஸ் தேவானந்தா ஸ 3 இராஜாங்க அமைச்சர்களும் ஜவியாழேந்திரன் -சந்திரகாந்தன் -சுரேன் ராகவன் ஸ மட்டுமே உள்ளனர். முஸ்லிம் பிரதிநிதிகள் 21 பேர் உள்ள நிலையில் இவர்களில் ஒருவர் அமைச்சரவை அமைச்சராகவும் ஒருவர் இராஜாங்க அமைச்சரா கவும் உள்ளனர். மலையக தமிழ் மக்களின் பிரதிநிதிகள் 9பேர் உள்ள நிலையில் இவர்களில் ஒருவர் அமைச்சரவை அமைச்சராகவும் ஒருவர் இராஜாங்க அமைச்சராகவும் உள்ளனர்.

தமிழ் எம்.பிக்கள் சார்பில் அமைச்சரவை அமைச்சராகவும் இராஜாங்க அமைச்சர்களாகவும் இருப்பவர்கள் தமிழ் தேசியத்துக்கு விரோதமானவர்களாகவும் தமிழ் மக்களின் உரிமைகளுக்கு உரத்து குரல் கொடுக்க முடியாதவர்களாகவுமே உள்ளனர். இதன் மூலம் தமிழ் மக்கள் பிரதிநிதிகள் எந்தளவுக்கு பலவீனமான நிலையில் உள்ளனர் என்பதனை தெரிந்து கொள்ள முடியும். இவ்வாறான நிலையில் இருந்தும் எம்.பி.க்கள் என்ற வகையில் தமக்கு கிடைக்கும் மேற்கூறியுள்ள வாய்ப்புகளைக் கூட தமது மக்களுக்காக பயன்படுத்தாத,பயன்படுத்த விரும்பாத அல்லது பயன்படுத்தத் தெரியாத தமிழ் எம்.பி.க்களை என்ன செய்வது?

இனப்பிரச்சினைக்கான தீர்வு, காணாமல் போனோர்

பிரச்சினை , இராணுவ ஆக்கிரமிப்பு .காணிப் பிரச்சினை ஆகிய 4விடயங்கள் மட்டுமே தமிழ் மக்களின் பிரச்சினை என்ற நினைப்பிலேயே பாராளுமன்றத்தில் தமிழ் எம்.பி.க்களின் கண்துடைப்பு செயற்பாடுகள் அமைந்துள்ளன. தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகள் ,வாழ்வாதாரப் பிரச்சினைகள், அன்றாடப் பிரச்சினைகள் ,தமிழ் இளைஞர் ,யுவதிகளின் வேலை வாய்ப்பின்மைப்பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் அவர்கள் அக்கறை காட்டாத நிலையே உள்ளது.

வெறுமனே வந்து பாராளுமன்ற கதிரைகளைச் சூடாக்கிவிட்டு, விவாதங்களில் வீர முழக்கமிட்டு பேசிவிட்டு, சலுகைகளை அனுபவித்து விட்டு சென்றுவிட்டால் மட்டும் போதாது. தமது மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க பாராளுமன்றத்தைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும். பாராளுமன்றத்தில் எம்.பி.க்களுக்குரிய சிறப்புரிமைகள், வசதிவாய்ப்புகள் தொடர்பில் மக்களுக்குச் சரிவர இதுவரை தெரியவராததாலேயே இவர்களில் பலரும் மீண்டும் மீண்டும் எம்.பிக்கள் ஆகிக்கொண்டிருக்கிறார்கள். தமது அடிப்படை,வாழ்வாதார பிரச்சினைகளுக்குப் பாராளுமன்றத்தின் ஊடாக இலகுவாகத் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள முடிந்தும், அதுதொடர்பில் தமது பிரதிநிதிகள் அக்கறையின்றி இருப்பது மக்களுக்குத் தெரிய வந்தால், இவர்கள் மீண்டும் எம்.பி.க்களாவது குதிரைக் கொம்பாகவே இருக்கும்.

# உணவே மருந்து

## வாழ்வில் இயற்க்கையும் உணவையும் தேடி ஒரு பயணம்

இயற்க்கையின் படைப்பில் எல்லையில்லா பரிமாண வளர்ச்சியினை மனிதன் பெற்றுக்கொண்டு இருக்கின்றான் நாம் உயிர் வாழ இயற்கை நமக்கு அனைத்து விதமான பண்புகளையும் நமக்கு அள்ளிக் கொடுத்திருக்கின்றது. ஆனால் நாம் அதனை பொருட்டாக மதிப்பதில்லை. இயற்கையாக பிரபஞ்சத்தில் ஒரு அதியசயத்தை நாம் பார்க்கலாம். இயற்கை மனிதனின் உதவியின்றி விலங்குகள், பறவைகள் மூலம் விதைகளை மண்ணில் சேர்த்து விடுகிறது. அதற்குரிய பருவ காலத்தில் விதைகளை இயற்கையே பதப்படுத்தி கால சூழல் வரும் வரை காத்திருந்து அழகாக அந்த விதைகளை முளைக்க செய்து விடுகிறது. பருவம் வந்தவுடன் இயற்கை, தேனீக்கள் மூலமும், பட்டாம்பூச்சிகள் மற்றும் பறவைகள், விலங்குகள் மூலம் ஆங்காங்கே மகரந்த சேர்கை நடைபெற்ற பூ, காய் கனிகளை பிற உயிரினங்களுக்கு உணவாக இயற்கை கொடுத்து விடுகிறது. உயிரினங்கள் அனைத்தும் தேவையான உணவை இதன் மூலம் எடுத்துக் கொள்கிறது. (உட்கொள்கிறது)



பின் இந்த மரங்களுக்கு தேவையான உரத்தையும் இயற்கை மிக அற்புதமாக இலைகளை காயவைத்து சருகுகளை உரமாக மக்கவைத்து கொடுத்து விடுகிறது. இயற்கை மனிதனின் தேவை இயற்கைக்கு இல்லை.

ஆனால் மனிதன் இயற்கை நம்பியே இல்லையென்றாலும் கூட வாழ்வியல் அடிப்படை தேவைக்காக வெகு தூரம் சென்று விட்டாலும்கூட ஆரோக்கியான உணவிற்க்கு இயற்கையை நம்பியே வாழ வேண்டி இருக்கிறது.

பண்டைய காலங்களில் எந்த விதமான ரசாயன உரங்கள் இல்லாமல் இயற்கை உரங்களை பயன்படுத்தி மனிதன் தன் தேவைகளை பூர்த்தி செய்து வாழ்ந்தான் உடலும் மனமும் ஆரோக்கியமாக இருந்தது. என்று செயற்கை உணவிற்க்கும் செயற்கை விவசாயம், செயற்க்கை காற்று, செயற்க்கை வாழ்வியல் என அறிவியல் வளர்ச்சியில் அனைத்தும் கண்டு பிடித்தானோ அன்றிலிருந்து. அதன் பின் விளைவுகளை அதிகம் அனபவித்துக் கொண்டு இருக்கின்றான். விளைவாசி உயர்வு, தீராத கொடிய பல நோய்கள், மனஉளைச்சல் பகைமை என செயற்க்கைக்கு மாறிய பின்பு குடும்ப அமைப்பு அன்னோன்யம், மனஅமைதி, உற்சாகம் என அனைத்து செயற்கையாக மாறிவிட்டது.

இப்போது அன்றாடம் புதுப்புது நோய்கள், தீர்க்க கூடியவை மற்றும் தீர்க்க முடியாதவை என பல உயிர்க்கொல்லி நோய்கள் வரை சென்று விட்டது. இதனால் மனரீதியாகவும். உடல் ரீதியாகவும் தொந்தரவுகள் பல மடங்கு சொல்ல முடியாத அளவிற்க்கு வேதனைகளை மனிதன் அனுபவித்துக் கொண்டிருக்கின்றான்.



இயற்க்கை தமக்கு கொடுத்து வாழ்க்கையை (பிரம்மாண்டமான) நாம் வெகுவாக தொலைத்து கொண்டே இருக்கின்றோம்.

ஒன்றோ இரண்டடோ என தொலைத்திருந்தால் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தி இருக்காது. ஆனால் இன்றை வாழ்வியல் சூழ்நிலையில் எதனை பேணிகாக்க வேண்டுமோ, அதனை தொலைத்து விட்டு எதனை தொலைத்தோம் என்று தெரியாமலே அனைத்தையும் தேடி கொண்டு தொலைத்தையும் தேடி கொண்டிருக்கிறது.

முக்கியமாக வாழ்வியல் தேவைக்கான உணவி பிரிவில் கூட அரசியல் செய்ய ஆரம்பித்து விட்டு பல இன்னல்களையும் விளைவுகளையும் அனுபவித்துக் கொண்டு இருக்கின்றோம்.




“அரசியலில் உணவு பிரிவு ஒரு பகுதி என்பது போய்” இப்போது உணவை வைத்தே பெரும் அரசயில் நடந்து கொண்டிருக்கிறது. உணவு அரசியலில் பல வித பரிமாணத்தை மாற்றி இப்போது நம் மீது மட்டும் அல்லாமல் இயற்க்கைகே கேடு விளைவிக்கும் அளவிற்க்கு மனிதன் துணிந்து செய்த பல கீழ்தரமான செயல்களால் மனித குலம் மொத்தத்திற்க்கும் ஊறுவிளைவிக்கின்ற அளவிற்க்கு சென்று விட்டோம். இப்போது அந்த கட்டத்திற்க்கு வந்து விட்டு “எதை தின்றால் பித்தம் தெளியும்” என்று அலைந்து கொண்டு இருக்கின்றோம்.

(டீழை றுயச) என்று சொல்லகூடிய அனைத்திலும் உணவு அரசியலில் பல பரிமாற்றம் (செய்கையாக) உற்பத்தி செய்ததன் விளைவு எந்த வெளிபுற ஆயுதம் இல்லாமலே நம் கண்முன்னே நம் தலைமுறையில் நாம் பல இன்னல்களை பார்த்துக் கொண்டே நகர்ந்து சென்று கொண்டிருக்கிறோம்.



(எ.கா) முன்பெல்லாம் ஒரு 25 வருடங்களுக்கு முன்பு வரை கூட ஒரு குடும்பத்தில் 4 முதல் 6 குழந்தை வரை உள்ளதை நாம் பார்த்திருப்போம். எங்கோ ஒரு குடும்பத்தில் குழந்தையின்மையை கேள்விப்பட்டு இருப்போம். தற்போதை சூழலில் அனைத்தும் மாறிபோய் பெண்களுக்கு மட்டும் அல்லாது ஆண்களுக்கும் குறைந்தது 80மூ மலட்டு தன்மையடன் இயற்க்கையான குழந்தை பாக்கியம் இல்லாதவர்களாக உள்ளனர். (மருத்துவமனையை சார்ந்து ஏக்கத்தோடு காத்து கொண்டிருப்பதை நாம் காணலாம்).

அவசர உலகில் எந்த விழிப்புணர்வையும் நம்பாமல் என்ன செய்கிறோம் எதை நோக்கி பயணிக்கின்றோம் என்ற சிந்தனை கூட இல்லாமல் “பிறந்தோம் வாழ்கிறோம்” என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். நமது அதி அற்புதான அறிவை ஞானத்தை சில சொற்ப ஆசைக்காக ஒரு வித மாயையில் சிக்கி உலா சென்று கொண்டிருக்கிறார்கள். (தொடரும்)

ஹெல்த் டிப்ஸ் by



ஜோ.பா. ராஜஸ்ரீ.

# முள்ளிவாய்க்கால் கஞ்சி கூட ஒரு பயங்கரவாதியா?

# முஸ்லிம் நீதிபதிகளின் பார்வை........

"வடக்கு,கிழக்கு மாகாணங்களில் பொலிஸ் அராஜகங்கள்,அடாவடிகளை மேற்கொள்ள முஸ்லிம் நீதிபதிகளைக் கொண்ட நீதிமன்றங்கள் துணைபோகின்றன. வடக்கு,கிழக்கு மாகாண நீதிமன்றங்களில் தமிழ் நீதிபதிகளுக்கு பற்றாக்குறை இருப்பதைப் பயன்படுத்தி அந்த இடங்களுக்கு முஸ்லிம் நீதிபதிகளை நியமித்து தமிழ் மக்களின் மாவீரர் நாள், தியாக தீபம் திலீபன் நினைவு நாள் , முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் உள்ளிட்ட நிகழ்வுகளுக்கு தடைகளை விதித்து தமிழ், முஸ்லிம் பகைமையை, வெறுப்பை ,குரோதத்தை வளர்க்க பேரினவாத ஆட்சியாளர்கள் நன்கு திட்டமிட்டு செயற்படுகின்றனர்"

கே.பாலா

2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி யுத்தம் முடிவடைந்த நிலையில், யுத்தத்தின் இறுதி நாட்களில் உயிரிழந்த உறவுகளின் நினைவாக ஆண்டுதோறும் "மே 18" தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது 2009ஆம் ஆண்டு இறுதிக்கட்ட யுத்தம் உக்கிரமடைந்த சந்தர்ப்பத்தில் இலங்கை அரசின் திட்டமிட்ட உணவுத்தடையாலும், பல மாத காலத் தொடர் யுத்தத்தினாலும் மக்கள் உணவின்றித் தவித்தனர், பலருக்கு ஒரு நேர உணவுகூட கிடைக்காமல் பட்டினி கிடந்தார்கள், குழந்தைகளுக்கான உலர் உணவிற்கு அலைந்தார்கள். பட்டினி சாவுகளும் நிகழத்தொடங்கின.

அக்காலகட்டத்திலேயே அந்த மக்களுக்கு கஞ்சியே உயிர்காக்கும் உணவானது.அரிசியும் தவிடும் கலந்து உப்புமிட்டு மக்கள் பசியை ஆற்றினார்கள். யுத்தம் முடிவுற்றுப் பல ஆண்டுகள் உருண்டோடிப் போனாலும் யுத்தம் தந்த வடுக்களை யாராலும் எளிதில் மறந்து விட முடியாது. இந்த யுத்தகால நினைவுகளில் மறக்கமுடியாதவற்றுள் ஒன்றாக விளங்குவது தான் இந்த முள்ளிவாய்க்கால் "கஞ்சி".பல இலட்சம் மக்கள் கஞ்சிக்காகக் காத்திருந்து தமது பசிப்பிணி போக்கிய இக் கஞ்சி உணவு அன்றைய நாட்களில் எமது மக்களின் வாழ்வோடு ஒன்றாகப் பின்னிப் பிணைந்ததாகவே காணப்பட்டது.

முள்ளிவாய்க்காலில் உணவுக்காகப் பட்ட அவலத்தையும், கஞ்சி உணவே எமது உறவுகளின் உயிரை தக்க வைத்தது என்பதையும் வெளிப்படுத்தும் முகமாகவும் அவற்றை எதிர்கால சந்ததியினருக்கும், இளைய தலைமுறையினருக்கும் தெரியப்படுத்தும் முகமாகவும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாட்களில் தமிழர் தாயகமெங்கும் பொது இடங்கள், ஆலயங்களில் மக்களுக்கு கஞ்சி வழங்குவது வழமை .

இம்முறையும் முள்ளிவாய்க்கால் "மே 18" நினைவு வாரத்தை முன்னிட்டு தமிழர் தாயகப்பகுதிகளில் கஞ்சி வழங்கும் நிகழ்வுகள் பொதுமக்களினாலும் பொது அமைப்புக்களினாலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் தான் சிங்கள பேரினவாதமும் சிங்களவர்களுக்கு ஒரு நீதியையும் தமிழருக்கு ஒரு நீதியையும் வழங்கு நீதித்துறையும் இனவாத பொலிஸ்துறையும் இணைந்து இந்த கஞ்சியைக்கூட பயங்கரவாத செயலாக்கி கஞ்சி வழங்கும் நிகழ்வுகளை இனவாத வெறியோடு தடைசெய்தும் தடுத்தும் வருகின்றன. ஆண் பெண் வேறுபாடின்றி கைது செய்து சிறைகளிலும் தள்ளுகின்றன.

இவ்வாறான அராஜகம் திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவில் உள்ள சேனையூர் பகுதியில் மூதூர் நீதிமன்றத்தினாலும் சம்பூர் பொலிஸாரினாலும் ஆரம்பித்து வைக்கப்பட்ட நிலையில் அது தற்போது கிழக்கு மாகாணமெங்கும் அரங்கேற்றப்பட்டு வருகிறது

சேனையூர் பகுதியில் மக்கள் முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சி காய்ச்சிக்கொண்டு இருந்தபோது அங்கு வந்த பொலிஸார் நீதிமன்ற தடை உத்தரவைக்காட்டி அச்சுறுத்தி தடுக்க முற்பட்டுள்ளனர். இதன்போது நாங்கள் வேறு யாரையும் நினைவு கூரவில்லை .உயிரிழந்த எமது உறவுகளுக்கும் பொது மக்களுக்காகவுமே இதனை செய்கின்றோம் எனக் கூறி வாக்குவாதத்தில் ஈடுபட்டதோடு மூதூர் நீதிமன்ற தடை உத்தரவை வாங்க மறுத்து முள்ளிவாய்க்கால் கஞ்சியை காய்ச்சி பொதுமக்களுக்கு பரிமாறி முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த பொது மக்களை நினைவு கூர்ந்தனர்.

இதனையடுத்து முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி பரிமாறிய குற்றச்சாட்டில் சம்பூர் பொலிஸார் நள்ளிரவு வீடுபுகுந்து சமூக செயற்பாட்டாளர் கமலேஸ்வரன் விஜிதா (வயது 40),சமூக செயற்பாட்டாளர் செல்வவினோத்குமார் சுஜானி (வயது 40)என்ற 2 பெண்களையும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் நவரெட்ணராஜா ஹரிஹரகுமார் (வயது 43) என்பவரையும் இதன்போது பொலிஸாரை தாக்கிய குற்றச்சாட்டில் கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ள கலைப்பிரிவு மாணவி கமலேஸ்வரன் தேமிலா (வயது 22), என்பவரையும் உடுத்த உடையுடன் கதறக்கதறக் கைது செய்து இழுத்துச் சென்ற சம்பவம் தமிழர் தாயகத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இதன் தொடராக கிழக்கு மாகாணத்தில் இதுவரையில் பல இடங்களில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்க நீதிமன்றங்களினால் தடைஉத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டதுடன் பொலிஸாரினால் பலர் கைது செய்யப்படும் மிரட்டப்படும் சம்பவங்கள் பதிவாகி வருகின்றன. இந்த விடயத்தில் இலங்கையின் நீதிமன்றங்களும் பொலிஸாரும் இன ,மதவாத ரீதியில் தடை யுத்தரவுகளை பிறப்பித்தும் கைதுகளை மேற்கொண்டும் வருகின்றன

திருகோணமலை - சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேனையூர் பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்ச மூதூர் நீதிவான் நீதிமன்ற முஸ்லிம் நீதிபதியே தடையுத்தரவு பிறப்பித்திருந்தார். இந்த தடைஉத்தரவை கோரிய பொலிஸார் அதற்கு கூறிய காரணங்கள்தான் விசித்திரமானவை. பொலிஸார் கோரிய தடை உத்தரவில் "பொது இடங்களான பாடசாலை ,கோவில் போன்ற இங்களில் முள்ளிவாய்க்காலில் இறந்தவர்களை நினைவூட்டும் எண்ணத்துடன் அதற்காக செயற்படுதல், சட்டவிரோதமாக மக்களை ஒன்று கூட்டுதல்,மக்களுக்கு தொற்று நோய்கள் ஏற்படும் வகையில் உணவு, கஞ்சி ,குடிபானம் வாழங்குவதற்காக மக்களை ஒன்று கூட்டுதல் ,சுகாதாரப்பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்க "என்ற காரணங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இதற்கு மூதூர் நீதிவான் நீதிமன்ற முஸ்லிம் நீதிபதியும் கண்ணை மூடிக்கொண்டு அனுமதி வழங்கியது மட்டுமன்றி திருகோணமலை - சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேனையூர் பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி பரிமாறிய குற்றச்சாட்டில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டவர்களை எதிர்வரும் 27 ஆம் திகதி வரையான 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கவும் கடந்த 13 ஆம் திகதி உத்தரவிட்டுள்ளார்.

இதே போன்றே கல்முனை பாண்டிருப்பு ஸ்ரீ அரசடியம்மன் ஆலய முன்றிலில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்க சென்ற அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி உட்பட குழுவினரை கஞ்சி வழங்கவிடாது விசேட அதிரடிப்படையினரும் பொலிஸாரும் விரட்டியடித்ததுடன் தமிழ் தேசிய மக்கள் முன்னணி இணைப்பாளருக்கு நீதிமன்ற தடை உத்தரவையும் வழங்கினர் . இந்த தடை உத்தரவை கல்முனை நீதவான் நீதிமன்ற முஸ்லிம் நீதிபதியே வழங்கியுள்ளார்.

இதில் கல்முனை நீதிவான் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தடைஉத்தரவில்" இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்பான தமிழீழ விடுதலைப்புலிகள் உறுப்பினர்களை நினைவு கூரும் முகமாக செய்யவுள்ள நிகழ்வினால் பயங்கரவாத நடவடிக்கைகள் மீண்டும் நாட்டில் தலைதூக்குவதற்கு வாய்ப்புக்கள் இருப்பதாலும் அவ்வாறான நிகழ்வு இடம்பெற்றால் பொதுமக்களின் அன்றாட நிலை பாதிப்படைய வாய்ப்பு இருப்பதாலும் யுத்தத்தின்போது முள்ளிவாய்க்காலில் மரணமடைந்த புலி உறுப்பினர்களை நினைவு கூரும் நிகழ்வு நடைபெறாமல் தடை உத்தரவு பிறப்பிக்கப்படுகின்றது"என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

எதிர்வரும் 18 ஆம் திகதிக்குள் இவ்வாறு இன்னும் பல இடங்களில் நீதிமன்ற தடை உத்தரவுகள் வழங்கப்படல்



அநீதியான பொலிஸாரின் நடவடிக்கைகளுக்கு முஸ்லிம் நீதிபதிகள் துணைபோவதுதான் நீதிமன்றங்களின் சுயாதீனத்தன்மையை கேள்விக்குட்படுத்தியுள்ளது. தற்போது வடக்கு,கிழக்கு மாகாணங்களில் உள்ள அதிகளவான நீதிமன்றங்களில் நீதிபதிகளாக முஸ்லிம் நீதிபதிகளே இருப்பது பேரினவாத ஆட்சியாளர்களுக்கும் இனவாத பொலிஸாருக்கும் தமிழின அடக்கு முறையை கட்டவிழ்த்து விட பெரும் வாய்ப்பாக அமைந்துள்ளது.

முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்குவது சுகாதார பாதிப்புக்களை ஏற்படுத்தும் , தொற்று நோயை பரப்பும் என்பதே இதனை தடை செய்ய பொலிஸார் முன்வைக்கும் காரணங்களில் முதன்மையானதாக இருக்கும் நிலையில் இந்தக் காரணங்கள் உண்மையில் மக்கள் நலன் கருதி பொலிஸாரினால் முன்வைக்கப்பட்டதாக இருக்குமானால் எதிர்வரும் 23,24 ஆம் திகதிகளில் "வெசாக் பொசன்"தினத்தை முன்னிட்டு சிங்கள பௌத்தர்களினால் நாடு முழுவதும் வீதிக்கு வீதி, சந்திக்கு சந்தி அமைக்கப்படும் "தன்சல்"நிலையங்களுக்கும் (அன்னதானம் வழங்கும் இடங்களுக்கும் )இதே காரணத்தைக் காட்டி நீதிமன்றங்களிடம் பொலிஸாரினால் தடை உத்தவுகளைப் கோர முடியுமா? அல்லது அப்படி தடை உத்தரவு கோரினால்கூட நீதிமன்றங்கள் வழங்கிடத்தான் முடியுமா?அல்லது யாராவது பொதுநலன் கருதி இந்த அன்னதான சாலைகளுக்கு எதிராக சுகாதார சீர்கேடு, தொற்று நோய் பரவுமென வழக்குத் தொடுத்தால் இந்த முஸ்லிம் நீதிபதிகளினால் அவற்றுக்கு தடை உத்தரவு போட முடியுமா?

தமிழர் தாயகமான வடக்கு,கிழக்கு மாகாணங்களில் பொலிஸ் அராஜகங்கள்,அடாவடிகளை மேற்கொள்ள முஸ்லிம் நீதிபதிகளைக் கொண்ட நீதிமன்றங்கள் துணைபோகின்றன. வடக்கில் கூட சில நீதிமன்றங்களில் முஸ்லிம் நீதிபதிகளே உள்ளனர். வடக்கு,கிழக்கு மாகாண நீதிமன்றங்களில் தமிழ் நீதிபதிகளுக்கு பற்றாக்குறை இருப்பதைப் பயன்படுத்தி அந்த இடங்களுக்கு சிங்கள நீதிபதிகளை நியமிக்காது இவ்வாறு முஸ்லிம் நீதிபதிகளை நியமித்து தமிழ் மக்களின் மாவீரர் நாள், தியாக தீபம் திலீபன் நினைவு நாள் , முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் உள்ளிட்ட நிகழ்வுகளுக்கு தடைகளை விதித்து தமிழ், முஸ்லிம் பகைமையை, வெறுப்பை ,குரோதத்தை வளர்க்க பேரினவாத ஆட்சியாளர்கள் நன்கு திட்டமிட்டு செயற்படுகின்றனர்.

இவ்வாறான தடைகளுக்கு கண்டனங்கள் ,எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டாலும் நீதிமன்றங்களின் சுயாதீனத்தில் நாம் தலையிட முடியாது.நீதிமன்றங்களின் உத்தரவுப்படியே பொலிஸார் செயற்படுகின்றனர் எனக்கூறி தமிழர் மீதான அடக்குமுறைகளுக்கு நியாயம் கற்பிக்கவே தற்போது ஆட்சியாளர்களினால் வடக்கு,கிழக்கு நீதிமன்ற முஸ்லிம் நீதிபதிகள் பயன்படுத்தப்படுகின்றனர் .இதற்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதியாக கடமையாற்றிய டி.சரவணராஜாவுக்கு குருந்தூர் மலை பௌத்த விகாரை தொடர்பில் ஏற்படுத்தப்பட்ட அழுத்தங்களும் அதற்கு அவர் அடிபணியாததால் விடுக்கப்பட்ட உயிர் அச்சுறுத்தலும் அதன் விளைவாக அவர் நாட்டை விட்டு வெளியேறியமையும் சிறந்த உதாரணம்.


VIBRANT
HOSPITALITY
GROUP
ONE OF CANADA'S FASTEST GROWING
HOSPITALITY AND DEVELOPMENT GROUPS
OVER
25 Years
IN THE HOSPITALITY
INDUSTRY
OUR EXPERTISE
CONSTRUCTION & DESIGN
OPERATIONS
REVENUE MANAGEMENT
SALES & MARKETING
HUMAN RESOURCES
LOCAL: 905 769 1509
TOLL FREE: 1 888 674 7770
VIBRANTHOSPITALITYGROUP.COM

# LOGAN KANAPATHI

Member Provincial Parliament ~ Markham – Thornhill

## புதிய மாற்றம்

வணிகத்திற்கான, Single Window for Business என்ற புதிய இணையவளிச் சேவையைத் தொடங்கியுள்ளோம். வணிகர்கள், தங்கள் வணிகத்திற்கான அனுமதி மற்றும் உரிமங்களின் நிலையை இணையத்தில் எளிதாக, சிக்கலின்றி, நேரத்தை விரையப்படுத்தாமல் பார்க்க உதவுகிறது. இந்தப் புதிய தளம், தொழில் முனைவோர் அனுமதிகளைப் பெற எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும் சரிபார்க்க அனுமதிக்கிறது. இந்தச் சேவை வருங் காலத்தில் வணிகர்களின் தேவைக்கேற்ப விரிவுபடுத்தப்படும்.



**மாகாணம் சார்ந்த தேவைகளுக்கு, என்னுடைய அலுவலகத்தை அணுகுங்கள்.**

**For appointments, email**
**logan.kanapathico@pc.ola.org**
**Tel: 905 305 1935**
**www. logankanapathi.ca**

**Constituency Office**
**7380 McCowan Road, Unit 3**
**Markham, ON L3S 3H8**

# சுமந்திரன் தனது கடந்த கால தவறுகளை உணர்ந்து இதில் இருந்து தெளிந்து எழுந்து வரவேண்டும்

-கட்டுரையாளர்:- வி.எஸ்.சிவகரன் -

சுமந்திரன் தனது கடந்த கால தவறுகளை உணர்ந்து இதில் இருந்து தெளிந்து எழுந்தால் தமிழ் தேசியம் தனதாக்கிக் கொள்ளும் நிலை ஏற்படலாம்.இதில் பட்டறிவு அனுபவத்தால் வருகின்ற உணர்வுத்தெளிவு, அரசியல் கடந்து, இலட்சிய இருப்பிற்கான செல்நெறியை தீர்மானிக்க வல்லதாக அமைய வேண்டும்.

தேசியம் என்பது இனம், மொழி, பண்பாடு - நாகரிகம், வாழ்வியல் முறைமை, வரலாற்றுத் தொடர்ச்சியை மரபு வழியாக பின்பற்றும் நடைமுறை ஒழுங்கு, அதன் தொன்மம், மரபுரிமையைப் பேணிக் காக்கும் கூட்டுப்பொறுப்பு என பல நிலையியல் இருப்பு செயல்முறை வழித்தோன்றல்கள் யதார்த்த உணர்வுகளுடன் மேலிடை கொள்வதாகும். அதுவே இருப்பியல் நிலையியல் கோட்பாட்டை நிலைநிறுத்தும் மாறலி அற்ற மரபு நிலையாகும். இது அடிப்படைக் கோட்பாட்டுச் சித்தாந்த நகர்வியல் போக்காகும்.

இத்தேசக் கோட்பாட்டை கட்டமைப்பதற்கு மொழி, பண்பாட்டியல் ஒழுங்கு முறைமை, ஒருங்கிணைந்த வரையறுக்கப்பட்ட நிர்ணய எல்லை, நிர்வாக முறைமை, உணர்வியல் கோட்பாடு, மரபுசார் பொருளாதாரம், உற்பத்தியாக்கம், தன்னாட்சி முறைமை, சுயநிர்ணய இருப்பிற்கான சுயமரியாதை கோட்பாடு என நின்று நிலைக்கக்கூடிய, வலுக்குன்றா, நிர்ணய நிலையை வலுவேறாக்கல் கடந்து, எக்காலமும் நிலைபேண்தகு உறுதித் தன்மையை உருக்குலையாமல் வலுக்குன்றாமல் கட்டமைப்பை நிலை தகு ஒழுங்கில் வலிமையோடு வல்லாளுமை இருப்புடையதாக்கி, தொலைநோக்கு சித்தாந்தத் துவத்தை ஒருமுகப்படுத்தி, வல்லாண்மையின் நிலையை நிறையாண்மைக்குட்படுத்துவதே தேசத்து தேசியம்.



இதில் சற்று வலிமையாக, எமது மண்ணில் எம்மை நாமே ஆளும் நிலையை தோற்றுவித்து, தாயகத்து உணர்வில் தமிழ்த்தேசியத்தை புகுத்தி, தன்னாட்சியை நிறுவி சுயநிர்ணய உரிமையை நமக்காக நாமே உருவாக்கிக் கொள்ளும் வலிமையான இரு கருத்து நிலையற்ற செயற்பாட்டு மைய வாதம் கொண்ட சமத்துவ சமநீதி க்குட்பட்ட வாழ்வியல் உணர்வை கட்டமைப்பதே தமிழ் தேசிய அடிப்படை மரபியல்பு நிலைப்பாடாகும். இதையே புலிகளும் பின்பற்றினார்கள். இதில் சில தேசிய பல்வகைமை மாறுபட்ட நிலைகளும் உண்டு.

ஆகவே, தமிழ்த் தேசியம் என்றால் என்ன, புலிகளை ஆதரித்தால் அவர்கள் தமிழ்த் தேசியவாதிகள், மாற்றுக் கருத்துடையோர் துரோகிகள் என்றும் எழுதப்படாத பொது விதி இங்கு உண்டு. அவரவர் இருப்பு நிலையை உணர்ந்தே தமிழ் தேசிய வாத வரைவிலக்கணமும் இருப்பியலாளர்களின் நகர்வுகளைமையப்படுத்தியேகட்டமைக்கப்படுகிறது. இதற்கு எழும் வாழ்வொழுங்கு நடைமுறையும் பெரும் செல்வாக்கு செலுத்துகின்றன.

இவை மாறுபட்ட காழ்ப்புணர்வு கருத்தியல் தோற்றமும் உண்டு.

இவை காலத்தால் நின்று நிதானமாக நிலைத்து நிமிர்ந்து எழுந்து நிதானிக்க கூடிய ஏது நிலைகளை ஒருமித்த கருத்துடையவர்களை ஒப்புவித்து வெளிப்படுத்தும் ஓர் யுக்தி ஆகும்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் திடீர் தமிழ்த் தேசியவாதம் என்பது பலரை வியக்க வைத்துள்ளது.

சிலரை விமர்சிக்க வைத்துள்ளது. கடந்த 14 ஆண்டுகளாக எதையெல்லாம் கேள்விக்கு உட்படுத்தி எதிர் விவாதம் செய்தாரோ அதற்கு நேர்மாறாக தூய தமிழ் தேசியம் பேசும் நிலையை தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவ தோல்வி கற்றுக் கொடுத்திருக்கிறது.

தமிழ் மக்களின் நாடித்துடிப்பை எண்ணத்து உணர்வுகளையும் புரிந்து கொள்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு 14 ஆண்டுகள் தேவைப்பட்டிருக்கிறது என்பது மிக நீண்ட காலமே.

அரசியல் என்பது காலத்துக்கு காலம் மக்களின் அடிப்படை உணர்வுகளைப் புரிந்து கொண்டு, அதற்கு ஏற்ற வகையிலே நகர்வியல் போக்கு கோட்பாட்டு சித்தாந்தத்திற்கு குறை ஏற்படாத வகையில், நின்று நிதானமாக சமயோசிதமான அணுகுமுறையுடன் நகர்த்து வோர்களையே தேர்தல் அரசியல் கடந்தும் இருப்பை நிலை நிறுத்த முடியும் என்பதே வகுக்கப்படாத நடப்பு விதி.

இதை சுமந்திரன் புரிந்து கொள்ளாமல் நகர்ந்ததே தோல்விக்கு அடிப்படை காரணமாக இருக்கலாம். யதார்த்த வெளிப்படைத்தன்மையும் பல சந்தர்ப்பத்தில் எதிராக மாறுவதுண்டு. யாவகராயினும் நா காக்க.

அறிவு, ஆளுமை, ஆற்றல், வல்லமை, மொழிப்புலமை, தர்க்கவியல் நுட்பம், சட்டப் புலமை, இராஜதந்திர - இராஜிக அணுகுமுறை, வெளிப்படைத்தன்மை, பேச்சாற்றல் - இவை எல்லாம் இருந்தும் தமிழ் மக்களின் இதயத்தால் நேசிக்க கூடியவராக இருக்கவில்லை. இன விடுதலைக்குப் போராடிய இனம் தனது வலி சுமந்தவர்களையும் அதை உணர்ந்து புரிந்து கொண்டவர்களையும் தான் தலைவர்களாக அழகு பார்க்கும்.

சுமந்திரனை அரசியலுக்கு அழைத்து வந்த சம்பந்தன் அவர்களும் ஒரு வலிமையான தூய தமிழ்த்தேசியவாதி இல்லை. சுமந்திரனின் அரசியல் அனுபவமின்றிய எல்லை மீறிய வார்த்தைகளை உடனுக்குடன் கட்டுப்படுத்தி, வழிபடுத்தி இருந்தால் சுமந்திரனுக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்காது.

ஆயுதப் போராட்டத்தை ஏற்றுக் கொள்ளாது, புலிகளையும் மனித உரிமைகள் விவகாரத்தில் விசாரிக்க வேண்டும் எனவும், சர்வதேச விசாரணை முடிந்து விட்டது எனவும், படிப் பறிவில்லாதவர்களும் வேலையில்லாதவர்களும்தான் வடகிழக்கில் போராடினர் என்றும், முஸ்லிம்கள் வெளியேற்றம் என்பது புலிகளின் இனச்சுத்திகரிப்பு என்றும் அவ்வப்போது விளித்து வந்ததன் விளைவே இந்த நிலைமை.

தமிழ் தேசிய நிகழ்வுகளில் பெரிய அக்கறை செலுத்த தவறியவையும் இதில் அடங்கலாம். அவரது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளும் இருக்கலாம். சந்தர்ப்ப சூழ்நிலைகளும் இருக்கலாம். அது அவரவர் மன பிரதிபலிப்பு.

ஆனால் தமிழ்த் தேசியத்திற்கு சுமந்திரன் மீது கூட்டுக் கோபம் உண்டு. துரோகி பட்டம் என்பது மிக மலிவாக ஏற்புடையது. மக்கள் மனங்களில் பதியக்கூடியது. ‘எப்பொருள் யார்,யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு’ எனும் வள்ளுவ வாக்கை உணர்வுச் சிந்தனை ஒருபோதும் அறிவார்ந்து நோக்குவதில்லை.

புலிகளின் தியாகத்தை மலினப் படுத்துபவர்களை தமிழ்த்தேசிய அரசியல் ஒருபோதும் இடமளிப்பதில்லை. அதனால்தான் விக்னேஸ்வரன் ஆயுதப் போராட்டம் பற்றி தவறான புரிதலுடன் வடக்கு மாகாண சபை முதல்வராகிய போதும், ஒரு வருட காலத்தில் மக்களின் நாடித்துடிப்பை உணர்ந்தவராக தமிழ்த் தேசிய அரசியலை முதன்மைப்படுத்தி நகரத் தொடங்கினர்.

அதனால்தான் விமர்சனங்கள் கடந்தும், சிங்கள சம்பந்தி நிலையை மறந்தும், தமிழ் மக்கள் மிகப்பெரிய ஆதரவு வழங்கினார்கள். அதை அவர் தக்க வைக்க முடியாமல் தடுமாற வைத்து விட்டார்.

புலிகளுக்கு எதிராக இருந்து, பல்வேறு விதமான காட்டிக்கொடுப்பு, கூட்டிக்கொடுப்பு, கடத்தல் என ஒட்டுக் குழுக்கள் பல. புலிகளின் துரோகிகள் பட்டியலில் இருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற கட்சிகளை புலிகள் ஏற்றுக் கொண்டதன் ஊடாக எருசலேம் நகரத்து புனித நீரும் காசியின் புண்ணிய தீர்த்தமும் தெளித்து துரோகி பட்டியலில் இருந்து தியாகி நிலைக்கு பாவம் விமோசனம் கொடுத்து உயர்த்தப்பட்டமை போல் உணர்ந்து கொண்டனர் .

அதனால்தான் இன்னும் அவர்கள் அரசியல் நகர்கிறது. இவர்களது கடந்த காலம் இலகுவில் எவரும் மறந்துவிட முடியாத கறை படிந்தவை. யுத்தத்தை நிறுத்தினால் புலிகளுக்கு ஒட்சிசன் கொடுத்த மாதிரி என்ற சித்தார்த்தன் கூட்டமைப்பில் சேர்ந்ததால் அவரும் தியாகி ஆகிவிட்டார்.

ஆகவே சுமந்திரன் தனது கடந்த கால தவறுகளை உணர்ந்து இதில் இருந்து தெளிந்து எழுந்தால் தமிழ் தேசியம் தனதாக்கிக் கொள்ளும் நிலை ஏற்படலாம்.இதில் பட்டறிவு அனுபவத்தால் வருகின்ற உணர்வுத்தெளிவு, அரசியல் கடந்து, இலட்சிய

இருப்பிற்கான செல்நெறியை தீர்மானிக்க வல்லதாக அமைய வேண்டும்.

தனது இன்றைய சக பாடிகளையும் விமர்சனத்திற்கு உட்படுத்த வேண்டும். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களினுடைய உணர்வுகளை நன்கு புரிந்து கொண்டு அவர்களின் மீள் வாழ்வுக்கும், காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்கவும் முள்ளிவாய்க்கால் திட்டமிட்ட இனப்படுகொலை என சான்று படுத்தவும் தனது சட்ட புலமையை உபயோகப்படுத்த வேண்டும்.

வடக்கு - கிழக்கு எங்கும் பல்வேறு வழக்குகள் கட்டணம் பெறாமல் நீதிமன்றங்களில் முன்னிலை யாகுவது போல் தமிழர்களின் இலட்சிய வேட்கையான தாயகம், தேசியம், தன்னாட்சி, சுயநிர்ணய உரிமை - இக்கோட்பாட்டை நடைமுறை சாத்தியமாக்க இதய சுத்தியோடு உளப்பூர்வமாக பணியாற்ற வேண்டும் என்பதே சுமந்திரனை எதிர்ப்பவர்கள் கூட எதிர்பார்க்கும் விடயமாகும்.

அவ்வாறு தமிழ்தேசிய எழுச்சிநிலையில் தொடர்ந்தால் இன்றைய வாக்கு வணிகர்களின் தமிழ் தேசியவாத இருப்பு என்பது கேள்விக்குறியாக மாறக்கூடிய நிலை தோன்றலாம். ஆகவே சுமந்திரன் தன்னை ஒரு தூ ய தமிழ் தேசியவாதியாக நிலை நிறுத்த வேண்டிய கால நிர்பந்தத்துக்கு நிர்கதியாக்கப்பட்டுள்ளார் .என உணர முடிகிறது.

ஆகவே நிலை தடுமாறாமல் இப்பயணத்தில் அவர் தொடர்ந்து பயணிக்க வேண்டும். அப்போதுதான் காலத்தால் உள்ளீர்த்துக் கொள்ளும் நிலை ஏற்படலாம்.

காலம் எந்த இடை வெளியையும் இதுவரை நிரப்பாமல் விட்டதில்லை. எனவே சுமந்திரனின் செயலே முடிவுறுத்தும் காலத்தால் கரை யேற்றமா ? அல்லது கறி வேப்பிலையா?? என்பதை.

தொகுப்பு:-எஸ்.ஆர்.லெம்பேட்



# இந்தியாவின் பின்னணியில் பூலோக அரசியல் நலனுக்காக சிவில் அமைப்புக்கள் செயற்படுகின்றன என்கிறார் தமிழ் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர்

தமிழ் மக்களை பயன்படுத்து இதுவரை காலமும் தங்களுடைய பூலோக அரசியல் நலனுக்காக இந்த நாட்டிலே தங்களுக்கு விரும்பிய தலைவர்களை கொண்டுவந்த வல்லரசுகள் இனிமேலும் தமிழர்களை பகடக்காயாக பயன்படுத்த முடியாது அதேவேளை இந்தியாவின் பின்னணியில் சிவில் அமைப்புக்கள் செயற்படுகின்றன எனவே பொது வேட்பாளர் ஒரு நாடகம் ஒரு சதி என தமிழ் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மேல்மாடி வீதியிலுள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணி காரியாலயத்தில் 22-05-2024 புதன்கிழமை மாலை இடம்பெற்று ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நாட்டிலே 1949ம் ஆண்டிற்கு பிறகு இருக்கின்ற ஒற்றையாட்சி கட்டமைப்பை அகற்றிவிட்டு ஒரு சமஸ்டி கட்டமைப்பை உருவாக்கி அதன் மூலம் தமிழர்கள் இந்த தீவிலே நிம்மதியாக வாழவேண்டும் என்ற சூழ்நிலையை உருவாக்குவது தான் எமது கோரிக்கையாகும்.

அதன் அடிப்படையில் ஒற்றையாட்சி கட்டமைப்புக்குள் கடந்த 75 வருடமாக தமிழ் மக்கள் தொடர்சியாக அடக்கு முறைக்கும் அடிமைத்தனத்துக்கும் உள்ளாக்கப்பட்டனர். இந்த அடக்கு முறைக்கு எதிராக தமிழர்கள் போராடிவந்து இன்று ஆயுத போராட்டம் பாரிய ஒரு உயிர்சேதங்களை ஏற்படுத்தி கோடிக்கணக்கான சொத்துக்களை இழந்து நிற்கின்ற சூழ்நிலையிலே மீண்டும் அந்த ஒற்றையாட்சி அரசியல் அமைப்பை ஆதரிக்கப் போகின்றோமா? அல்லது சமஸ்டி கட்டமைப்புக்காக குரல் கொடுக்கப் போகின்றோமா? என்ற விடையத்தை நாங்கள் தெளிவடைய வேண்டும்.

கடந்த 2012ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஒரு ஒற்றையாட்சி அரசியல் அமைப்புக்கு இனங்கி அவர்கள் மக்களுக்கு தமிழ் தேசியத்தை கூறிக்கொண்டு மாறாக 2016ம் ஆண்டு அரசியல் அமைப்பு தயாரிக்கப்பட்டது அதில் 6 பேர் கொண்ட குழுவில் கூட்டமைப்பின் தலைவர் சம்மந்தன் மற்றும் ஊடக பேச்சாளர் எம். சுமந்திரன் இருந்தனர்.

அதில் அவர்கள் ஏக்கிய ராஜ்சிய என்ற வார்த்தையை பிரயோகித்து மக்களை ஏமாற்றி ஒற்றியாட்சி அரசியல் அமைப்புக்கு எதிராக போராடிவந்த அந்த நிலையை மாற்றி அவர்களாகவே ஏற்றுக்கொள்ளக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தும் விதமாக இவர்கள் ஒரு பச்சை துரோகத்தை செய்கின்ற போது அந்த நேரத்தில் வடக்கு கிழக்கில் தமிழர்கள் எழுக தமிழர் என்ற மக்கள் எழுச்சியை ஏற்படுத்தி சர்வதேச சமூகத்திற்கு தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் இது தான் என மக்கள் எழுச்சி மூலம் தெரியப்படுத்தினர்.




அன்றைய நேரத்தில் இந்த சிவில் அமைப்புக்கள் நித்திரை கொண்டதா? அல்லது கோமாவில் இருந்தனரா? என்பது தான் எனது கேள்வி ஆகவே எங்களை பொறுத்தமட்டிலே ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் எல்லாம் ஒரு நாடகம் ஒரு சதி இதற்கு பின்னணியில் இந்தியா நிற்கின்றது.

இந்தியா விரும்புகின்ற நபர்களே அரசியல் தரப்புக்களையே காட்டினால் அவர்களுக்கு வாக்களிக்கமாட்டார்கள் அவர்களின் சொல்லை கேட்கமாட்டார்கள் என்பதற்காக இப்படிப்பட்ட சிவில் அமைப்புக்கள் போன்றவற்றை தங்களின் நிகழ்சி நிரலை நிறைவேற்றுவதற்காக இப்படிப்பட்ட கைங்கரியங்களை இந்தியா செய்கின்றது.

தேர்தல் பகிஸ்கரிப்பு விடையத்தில் மூன்று விடையங்களை சொல்ல இருக்கின்றோம் அதில் முதலாவது ஜனாதிபதியாக வார விரும்புவருக்கு ஒரு செய்தியை சொல்ல இருக்கின்றோம் அவர் ஜனாதிபதியாக வந்தால் தமிழ் மக்கள் ஏனையவர்களுக்கு வாக்களித்திருந்தால் தான் ஜனாதிபதியாக வந்திருக்க முடியாது என்ற விடையத்தையும்.

இரண்டாவதாக ஜனாதிபதியாக வராமல் தோற்றவர்கள் தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசைகளை ஏற்றுக் கொண்டு எழுத்து மூலம் கொடுத்திருந்தால் நாங்கள் ஜனாதிபதியாக வந்திருக்கலாம் என்ற விடையத்தையும்.

மூன்றாவதாக இந்த தமிழ் மக்களை பயன்படுத்து இதுவரை காலமும் தங்களுடைய பூலோக அரசியல் நலனை இந்த நாட்டிலே தங்களுக்கு விரும்பிய தலைவர்களை கொண்டுவந்த இந்த வல்லரசுகள் இனிமேலும் வந்து தமிழர்களை நாங்கள் பகடக்காயாக பயன்படுத்த முடியாது அவர்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றிய பிறகுதான் தாங்கள் விரும்பிய தலைவர்களை கொண்டுவர இந்த மக்களிடம் கேட்கலாம் என்ற நிலைப்பாட்டை உருவாக்குவதற்காகதான் இந்த தேர்தல் பகிஸ்கரிப்பை நாங்கள் அறிவித்தோம் என்றார்.

# “இலங்கையில் தமிழ் ஊடகவியலாளர்கள் படுகொலைகளுக்கு சர்வதேச விசாரணை தேவை”

## மட்டக்களப்பு ஊடக அமையம் வலியுறுத்து

இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட 35 தமிழ் ஊடகவியலாளர்களின் படுகொலைகளுக்கு சர்வதேச விசாரணை வேண்டும் என மட்டக்களப்பு ஊடக அமையம் கோரிக்கை விடுத்துள்ளது.



இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்க முடியாத நிலையில் இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்கும் பொறுப்பு சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளுக்கு உண்டு எனவும் அந்த விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மட்டக்களப்பில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 20 ஆவது ஆண்டு நினைவு தினம் அனுஸ்டிக்கப்படும் நிலையில் கடந்த இருபது வருடங்களாக அவரின் படுகொலைக்கு காரணமான குற்றவாளிகள் இதுவரை கைது செய்யப்படவில்லை.

இலங்கையில் இன்று வரை 43 ஊடகவியலாளர்கள் படுகொலைசெய்யப்பட்டுள்ளனர். இதில் 35 தமிழ் ஊடகவியலாளர்களும் 05 சிங்கள ஊடகவியலாளர்களும் 03 முஸ்லீம் ஊடகவியலாளர்களும் அடங்குகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன அவர்களின் ஆட்சிக்காலத்தில் 01 ஊடகவியலாளரும் ரணசிங்க பிரேமதாச அவர்களின் ஆட்சிக்காலத்தில் 02 ஊடகவியலாளரும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலத்தில் 13 ஊடகவியலாளர்களும் முன்னாள் ஜனாதிபதி மகிந்தராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் 26 ஊடகவியலாளர்களும் படுகொலைசெய்யப்பட்டுள்ளனர்.1985ம் ஆண்டு தொடங்கிய தமிழ் ஊடகவியலாளர்களின் படுகொலைகள் 2010ம் ஆண்டுவரை தொடர்ந்துகொண்டே இருந்தது.

இந்நிலையில் இலங்கையில் நடைபெற்றுவந்த படுகொலை ஆட்சியை ஊடகத்துறையின் பெரும்பங்குடன் முடிவுக்கு கொண்டுவந்த இலங்கை அரசாங்கம் இரண்டு சிங்கள ஊடகவியலாளர்களின் படுகொலைகள் குறித்த விசாரணைகளை ஆரம்பித்திருந்த போதும் அதன் குற்றவாளிகள் கூட கைது செய்யப்படவில்லை. அத்தோடு இந்த நாட்டில் பெருந்தொகையாக படுகொலை கொல்லப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களின் விசாரணைகளை இன்றுவரை ஆரம்பிக்கவில்லை.

இந்நிலையில் மட்டக்களப்பில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட ஊடகவியலாளரும் மனிதவுரிமை செயற்பாட்டாளருமான ஐயாத்துரை




நடேசன் அவர்களின் 20 வது ஆண்டு நினைவு நாளினை முன்னிட்டு

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் , மட்டு ஊடக அமையம், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் இணைந்து சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளிடம் மேற்படி கோரிக்கையை முன்வைக்கின்றோம்.

1. இலங்கையில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட அனைத்து

ஊடகவியலாளர்களின் படுகொலைகளுக்கு சர்வதேச விசாரணை நடாத்தப்பட்ட வேண்டும்.

2. இலங்கையில் இன்றுவரை சுட்டுக்கொல்லப்பட்ட காணாமல்போன ஊடகவியலாளர்களின் பெயர் விபரங்களை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக வெளியிடவேண்டும்.

3. இலங்கையில் தொடரும் மறைமுகமான ஊடக அடக்குமுறையை தடுத்து நிறுத்தி



ஊடகசுதந்திரத்தை உறுதிப்படுத்த சர்வதேச அமைப்புக்கள் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

4. மட்டக்களப்பில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நடேசனின் படுகொலை விசாரணையை மீள ஆரம்பிக்கவேண்டும்.

உள்ளிட்ட எமது கோரிக்கைகளை சர்வதேச தேச அமைப்புகளின் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு சமன் என்ற அடிப்படையில் 20 வருடங்களுக்கு பின்னரும் இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்க முடியாத நிலையில் இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்கும் பொறுப்பு சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளுக்கு உண்டு என்பதை வலியுறுத்தி நிற்கின்றோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

*If you're looking for a place to install or upgrade your radio, speakers, subwoofers, lights, remote starters, tracking devices and more; Look no further...*

*Storm Tech will take care of you with excellence and give you the best prices in Toronto*

*Feel free to contact us at 647-621-7725 for your free quotation!!*

STORM TECH
Audio & Lights

கனடிய செய்திகள்
Canadian News



# கடந்த 26 அன்று ஞாயிற்றுக்கிழமை கனடா ஸ்காபுறோ நகரில் இடம்பெற்ற உதயன் சர்வதேச விருதுகள் வழங்கும் விழா

மேற்படி விழாவில் வெளிநாடுகளிலிருந்து விருது பெறுவதற்காக கனடாவிற்கு அழைக்கப்பெற்ற மூவர் மற்றும் கனடா வாழ் வெற்றியாளர்கள் நால்வர் என எழுவர் மேடையில் தனித்தனியாகக் கௌரவிக்கப்பட்ட பின்னர் ஒன்றாக மேடையில் நிற்பதையும் அவர்களை வாழ்த்தும் வகையில் கனடா ஒன்றாரியோ மாகாணத்தின் அமைச்சுக்களின் பாராளுமன்றச் செயலாளரும் மாகாண உறுப்பினருமான லோகன் கணபதி மற்றும் மார்க்கம் நகர சபையின் 7ம் வட்டார உறுப்பினர் யுனைற்றா நாதன் உட்பட அழைக்கப்பெற்ற அரசியல் தலைவர்கள் அங்கு சமூகமளித்து உதயன் பத்திரிகையின் சிறப்புக்களையும் உதயன் சர்வதேச விருது விழாவின் மேன்மை பற்றியும் உரையாற்றினார்கள்.





கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் திரு. முரளி சிவகுருவின் தலைமையுரையைத் தொடர்ந்து அரசியல் பிரமுகர்கள் மேடைக்கு அழைக்கப்பெற்று கௌரவிக்கப்பெற்றனர்.

தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் பாடல்கள் வழங்கும் நிகழ்ச்சிகள் என சபையோரை மகிழ்விக்கும் நிகழ்வுகள் சேர்க்கப்பட்டிருந்தன.

இவ்வருடத்தின் விருதுகளைப் பெற தேர்ந்தெடுக்கப்பெற்றவர்களை கௌரவிக்கும் நிகழ்வு தொடர்ச்சியாக இடம்பெற்றது.

உதயன் "தலைமைத்துவ விருது" வழங்கப்பெற்ற சிவஸ்ரீ நா. சோமஸ்கந்தக் குருக்கள் அவர்கள். உதயன் "வர்த்தக மேம்பாட்டு விருது" வழங்கப்பெற்ற வீடு விற்பனை முகவர் ராஜ் நடராஜா அவர்கள். உதயன் "கலை இலக்கிய மேன்மை விருது" வழங்கப்பெற்ற தங்கராசா சிவபாலு அவர்கள். உதயன் "இளையோருக்கான அடையாள விருது" வழங்கப்பெற்ற செல்வி ஸ்ருதி பாலமுரளி அவர்கள். "உதயன் வாழ்நாள் சாதனையாளர் - தமிழ்நாடு விருது" வழங்கப்பெற்ற "தமிழ்பணி" ஆசிரியர் வா.மு.சே. திருவள்ளுவர் அவர்கள். உதயன் "சிறப்பு விருது - ஐரோப்பா" என்னும் கௌரவ விருது வழங்கப்பெற்ற பிரான்ஸ் வாழ் ஆர்கேஎஸ். அருள்மொழித்தேவன் அவர்கள் ஆகியோர் மேடையில் மகிழ்ச்சியுடன் நிற்பதைக் காணலாம்.




















































# “வடக்கு கிழக்கிலே பொலிஸாரின் இனவாதச் செயல்பாடுகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்கிறார் செல்வராசா கஜேந்திரன் எம்.பி

வடக்குகிழக்கிலேநீதிமன்றங்கள்இனவாதப்பொலிஸாரின் கட்டளைகளிற்கு பணிந்து செயல்படுகின்றதா என்றொரு கேள்வி இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்ற 14-05-2024 அமர்வில் பங்குகொண்டு கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு நாடாளுமன்ற உறுப்பினர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

எங்கள் தேசத்தின்மீது சிறிலங்கா அரசு இனப்படுகொலையை நிகழ்த்தி 15 ஆண்டுகள் கடந்திருக்கின்றது. இந்த 15 ஆண்டுகள் கடந்தும் படுகொலை செய்யப்பட்டவர்களிற்கு நீதி கிடைக்கவில்லை. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அதாவது படையினரின் கைகளில் உறவுகளை ஒப்படைத்தோர், ஈ.பி.டி.பி, கருணா, பிள்ளையான. போன்றாரோல் கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டோர் தங்களது உறவுகளைத் தேடி இன்றும் அலைந்துகொண்டு இருக்கின்றார்கள். இந்தவேளையிலே வருடந்தோறும் இங்கு இடம்பெற்ற இனப்படுகொலையை நினைவுகூறும் விதமாக வடக்கு கிழக்கிலே வாழும் தமிழ் மக்கள் இந்த இனப்படுகொலை வாரத்தை அனுஸ்டிப்பதும் அந்த வாரத்தில் இனப்படுகொலை தொடர்பில் காட்சிப்படுத்துவதும் 2009இலே இனப்படுகொலை இடம்பெற்றுக்கொண்டிருந்தபோது உணவை ஆயுதமாக பயன்படுத்திய கோட்டாபாய ராஜபக்சா அவரது அண்ணன் மகிந்த ராஜபக்சாவும் பட்டினிச் சாவிற்குள் தமிழரகளைத் தள்ளியபோது அந்த தமிழர்கள் உயிர் பிளைத்துக்கொள்வதற்காக

அங்கே நெல்லில் இருந்து வெளியேறிய குறுனலை உமியில் இருந்து பிடைத்தெடுத்து தண்ணீர் போட்டு அவித்து பச்சைக் குழந்தைகளிற்குகூட உணவாக ஊட்டு உயிர் பிழைத்த வரலாறு நடைபெற்றிருக்கின்றது.

இதனை நினைவுகூறும் விதமாக அதனை இந்த வாரத்திலே நாங்கள் செய்வது வழமை. திருகோணமலை மாவட்டம் கட்டைபறிச்சான் பகுதியிலே புவனகணபதி ஆலயத்தில் கஞ்சி கொடுக்கும் நிகழ்வில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது அந்த நிகழ்வில் ஈடுபட்டமைக்காக எங்களுடைய கட்சியின் திருகோணமலை உதவிச் செயலாளர் நவரத்தினராசா கரிகரகுமார் வயது 43 மற்றும் பொது மக்கள் மூன்று பெண்கள் கமலேஸ்வரன் விஜிதா வயது 40, கமலேஸ்வரன் தேன்நிலா வயது 21, சுஜானி 32 வயது ஆகியோரே கைது செய்யப்பட்டு மூதூர் நீதிமன்றில் முறபடுத்தப்பட்டு 14 நாள்கள் தடுப்புக் காவல் வழங்கப்பட்டுள்ளது. இதுதான் இந்த நாட்டினுடைய நல்லிணக்கம் மற்ற மதங்களை மதிக்கின்ற சித்துவமாக இருக்கின்றது.

ஓர் ஆலயத்திலே கஞ்சி காச்சியமைக்காக இந்த தண்டணை வழங்கப்பட்டிருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயம். இந்த விடயத்தை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம். அவர்கள் 4 பேரும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். வடக்கு கிழக்கிலே நீதிமன்றங்கள் இனவாதப் பொலிஸாரின் கட்டளைகளிற்கு பணிந்து செயல்படுகின்றதா என்றொரு கேள்வி இருக்கின்றது. பொலிஸார் எதனைச் சொன்னாலும் அதனை அப்படியே ஏற்றுக்கொண்டு நீதிமன்றங்கள் செயல்படவேண்டிய அளவிற்கு நீதிதன்றங்களின்
சுயாதீனத் தன்மை பறிக்கப்பட்டுள்ளதா என்றொரு கேள்வி இருக்கின்றது. நேற்றைய தினம் நீதிமன்றம் ஒரு உத்தரவு வழங்கியிருக்கின்றது பொது மக்களை ஒன்று கூட்டுவதும் அவர்களிற்கு கஞ்சிகளை பரிமாறுவதும் சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்தும் என பொலிசார் கேட்டுக்கொண்ட தடை உத்தரவை அப்படியே வழங்கியுள்ளார்கள் மறு கேள்வி இல்லாமல். அப்படி என்றால் நான் கேட்கின்றேன் இந்த மாதம் உங்களுடைய வெசாக் மாதம். இந்த மாதத்திலே தனசல உணவு வழங்களை தடை செய்யுமாறு பொலிஸார் கோருவார்களா, அதற்கு நீதமன்றங்கள் தடை உத்தரவு வழங்குமா. இது தமிழர்களிற்கு ஒரு நீதி, சிங்களவர்களிற்கு ஒரு நீதி. பௌத்த நிகழ்வை முன்னட்டு தெருவிற்கு தெரு அந்த நிகழ்வை நீங்கள் செய்கின்றீர்கள் அந்த நிகழ்வை தடுத்து நிறுத்த தயாராக இருக்கின்றீர்களா.

இந்த இனவாதச் செயல்பாடுகளை உடனடியாக நிறுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்வதோடு பொலிஸாரின் அத்து மீறல்கள் எல்லைதாண்டிச் சென்றுகொண்டு இருக்கின்றன. கடந்த 10 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலே இரு பொலிஸார் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரை துரத்திச் சென்று உதைந்து வீழ்த்தியதனால் அவர் மதிலோடு மோதி வீழ்ந்தமையினால் உயிரிழந்திருக்கின்றார். இந்த இரு பொலிஸாரும் உடனடியாக கைது செய்யப்பட வேண்டும், பொலிஸாரின் அராஜகங்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டும் இதேபோன்று வவுனியா வடக்கில் புளியங்குளம் பொலிஸ் பிரிவில் ஒருவரது வீட்டிற்குள் இன்னொருவர் கடந்த ஏப்பிரல் 12 ஆம் திகதி புகுந்து தாக்குகின்றனர் வெளிநாட்டவரின் பணத்திற்காகவே பொலிஸார் இவ்வாறான அராஜகங்களில் ஈடுபடுகின்றனர் என்றார்.






# தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை மேலும் 5 ஆண்டுகளுக்கு நீடிப்பதாக இந்திய அரசுஅறித்துள்ளதை கண்டிக்கின்றேன்!

## உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன்




விடுதலைப்புலிகள் இயக்கம் மீது தடையை நீடிப்பது எந்த வகையிலும் நீதியின்பால் பட்டதல்ல. அநீதியான இந்தத் தடை விதிப்பை வன்மையாகக் கண்டிப்பமாக உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்தார்.

இந்திய அரசினால் தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை மேலும் 5 ஆண்டுகளுக்கு நீட்டிப்பதாக அறித்துள்ளது இதனை கண்டித்து உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் இன்று புதன்கிழமை (15) ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை மேலும் 5 ஆண்டுகளுக்கு நீட்டிப்பதாக இந்திய அரசின் உள்துறை அறிவித்துள்ளது. '2009ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற போர் முடிவுக்கு வந்த பிறகும், விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழீழத் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிடவில்லை. அதற்கான ஆதரவு மற்றும் நிதித் திரட்டல் வேலைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

விடுதலைப்புலிகளின் இயக்கம் தமிழ்நாட்டில் இரகசியமாகச் செயல்படுகிறது. அனைத்துத் தமிழர்களுக்குமான தனி நாடு என்ற கோரிக்கையில் இந்தியாவில் உள்ள தமிழ்நாட்டையும் சேர்த்துள்ளது. இந்தியாவின் இறையாண்மை, ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கு புலிகளின் நோக்கம் எதிரானது மட்டுமல்ல, இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவும் உள்ளது.'

ஒரே பொய்யைத் திரும்பத் திரும்ப கூறுவதின் மூலம் அதை மெய்யாக்கிவிடும் முயற்சியில் கடந்தகாலங்களில் பதவியிலிருந்த இந்திய அரசுகளும், இப்போது பதவியில் இருக்கும் இந்திய அரசும் செயல்பட்டு வருகின்றன.

இலங்கையில் தமிழர்கள் வாழும் வடக்கு-கிழக்குப் பகுதி மட்டுமே அடங்கிய தமிழீழ கோரிக்கையை தமிழர் விடுதலை கூட்டணி போன்ற அறவழிப் போராட்டங்கள் நடத்திய அரசியல் கட்சிகளும், ஆயுதப் போராட்டம் நடத்திய போராளிகள் அமைப்புகளும் முன்வைத்தனவே தவிர, ஒருபோதும் இந்தியாவில் உள்ள எந்த பகுதியின் மீது அவர்கள் உரிமை கொண்டாடவில்லை என்பது உலகறிந்த உண்மையாகும்.

இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கோ, இறையாண்மைக்கோ எதிராக ஒருபோதும் விடுதலைப்புலிகள் செயல்பட்டதில்லை. மேலும் இந்தியாவின் பகை நாடுகளுடன் எந்த வகையான உறவையும் விடுதலைப்புலிகள் வைத்துக்கொள்ளவில்லை. ஆனால், சிங்கள அரசு இந்தியாவின் பகை நாடுகளுடன் நெருங்கி உறவாடி, அந்நாடுகள் இலங்கையில் இந்தியாவுக்கு எதிரான தளங்களை அமைப்பதற்குத் துணையாக நிற்கிறது என்ற உண்மையைக்கூட இந்திய அரசு எண்ணிப்பார்க்க தவறிவிட்டது.

இந்த உண்மையை உணர்ந்திருந்த காரணத்தினால்தான் இந்தியத் தலைமையமைச்சராக இந்திராகாந்தி அவர்கள் இருந்தபோது, சிங்கள அரசுக்கும், ஈழத் தமிழர் தலைவர்களுக்குமிடையே பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்வுகாண இந்தியாவின் சிறப்புத் தூதுவராக ஜி. பார்த்தசாரதி அவர்களை அனுப்பினார்.

அந்தப் பேச்சுவார்த்தையில் ஒப்புக்கொள்ளப்பட்ட உடன்பாட்டினை செயல்படுத்தாமல் சிங்கள அரசு காலம் கடத்தி ஏமாற்றுவதற்கு முயற்சி செய்தபோது, ஈழப் போராளிகளை இந்தியாவுக்கு அழைத்து இந்திய இராணுவ முகாம்களிலேயே அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டதோடு, ஆயுதங்களும் வழங்கப்பட்டு அவர்கள் இலங்கை திரும்பித் தங்களது போராட்டத்தைத் தொடர்ந்தார்கள் என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும்.

இந்த உண்மையைச் சிறிதும் உணராமல் தலைமையமைச்சர் ரஜீவ்காந்தி சிங்கள அரசுடன் உடன்பாடு செய்து, அதன்படி போராளிகளின் ஆயுதங்களைப் பறிமுதல் செய்வதற்கு இந்திய அமைதிப் படையை இலங்கைக்கு அனுப்பினார் என்பதும், அந்த உடன்பாடு படுதோல்வியடைந்தது என்பதும் அனைவரும் அறிந்ததே ஆகும்.

1991ஆம் ஆண்டில் ரஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்ட போது, விடுதலைப்புலிகள் மீது பழி சுமத்தப்பட்டு அவர்களின் இயக்கத்திற்கு முதல் தடை விதிக்கப்பட்டது. அது இன்றுவரை தொடர்கிறது.

ரஜீவ்காந்தியின் கொலை மற்றும் அதன் பின்னணியில் வகுக்கப்பட்ட சதித்திட்டங்கள் குறித்து ஆராய்வதற்காக இந்திய அரசினால் நீதிபதி ஜெயின் ஆணையம் அமைக்கப்பட்டது. இராசீவ் கொலையைப் பற்றி விசாரித்த சி.பி.ஐ. அதிகாரி கார்த்திகேயன் செய்த தவறுகளை ஆணையம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியது. அதுமட்டுமல்ல, சந்திராசாமி உள்பட 21 நபர்கள் குறித்து தனது ஐயப்பாடுகளை பதிவு செய்து அவர்களையும் விசாரிக்கவேண்டும் என்றும் கூறியது.

தலைமையமைச்சராக பி.வி. நரசிம்மராவ் இருந்தபோது அமைக்கப்பட்ட ஜெயின் ஆணையம், தலைமையமைச்சராக வாஜ்பாய் பொறுப்பேற்றப் பிறகு அவரின் அரசிடம் ஜெயின் ஆணையம் தனது இறுதி அறிக்கையை அளித்தது. அந்த அறிக்கையில் குறிப்பிட்டதற்கிணங்க இராசீவ் கொலைப் பற்றி மீண்டும் முழுமையான புலனாய்வு செய்வதற்காக 1998ஆம் ஆண்டு பல்நோக்குப் புலனாய்வுக் குழு ஒன்றினை அப்போதைய உள்துறை அமைச்சர் அத்வானி அமைத்தார்.

பல்நோக்கு விசாரணைக்குழு 20 ஆண்டுகளுக்கு மேலாகியும் தனது புலனாய்வை இறுதி செய்து அறிக்கை அளிக்கத் தவறிவிட்டது. ஜெயின் ஆணையம் சுட்டிக்காட்டிய நபர்கள் யாரையும் தனது விசாரணை வளையத்திற்குள் பல்நோக்கு விசாரணைக்குழு கொண்டுவந்து விசாரிக்கவே இல்லை. காலம் கடத்திய இந்த புலனாய்வுக் குழு இறுதியில் கலைக்கப்பட்டுவிட்டது.



ரஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 26 பேர்களும் 31 ஆண்டு கால சட்டபோராட்டத்திற்குப் பின்னால் முழுமையாக விடுவிக்கப்பட்டுவிட்டார்கள். இக்கொலையில் சம்பந்தப்பட்ட உண்மையான குற்றவாளிகள் தப்பிவிட்டார்கள் எனக் கூறுவதைவிட, தப்பிக்க விடப்பட்டார்கள் என்று கூறுவதே சரியானதாகும்.

ரஜீவ் கொலையைக் காரணமாகக் காட்டித்தான் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டது. அந்தக் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்ட பிறகும், உண்மையான குற்றவாளிகளைக் கண்டறிவதற்காக அமைக்கப்பட்ட பல்நோக்குப் புலனாய்வுக் குழு 20 ஆண்டு காலமாக யாரையும் கைது செய்யாமல் காலங் கடத்தி இறுதியில் கலைக்கப்பட்டுவிட்டது என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# இலங்கையில் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்களைப் பயன்படுத்தி ஆட்சி மாற்றங்களும் தேர்தல் வெற்றிகளும் தீர்மானிக்கப்படுவது தொடர்கிறனவா?

கே .பாலா

"உயிர்த்த ஞாயிறு "தின தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களில் பயங்கரவாதிகளின் நோக்கமும் அரசியல்வாதிகளின் நோக்கமும் ஒன்றாகவே இருந்துள்ளதனால் தான் தாக்குதல் நடந்து 5 வருடங்களாகி விட்ட நிலையிலும் தாக்குதல் சூத்திரதாரிகளும் சிக்கவில்லை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியும் கிடைக்கவில்லை. ஆனால் அந்த தாக்குதலை பயன்படுத்தி ஆட்சி மாற்றங்களும் தேர்தல் வெற்றி, தோல்விகளும் தீர்மானிக்கப்படுவது மட்டும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன .

2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி "உயிர்த்த ஞாயிறு" தினத்தில் கொழும்பு,நீர்கொழும்பு,மட்டக்களப்பு தேவாலயங்கள் மற்றும் கொழும்பிலுள்ள 5 நட்சத்திர ஹோட்டல்களில் முஸ்லிம் பயங்கரவாதிகளினால் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு 45 வெளிநாட்டவர்கள் உட்பட 269 க்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் உயிர் பலியெடுக்கப்பட்டதுடன் 500 க்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் படுகாயப்படுத்தப்பட்ட கொடூரம் நடந்து கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதியுடன் 5 வருடங்கள் நிறைவடைந்த நிலையில் கடந்த 21ஆம் திகதி "உயிர்த்த ஞாயிறு"தினம் இலங்கையில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

அதுமட்டுமன்றி 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி "உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள்" தொடர்பில் பாராளுமன்றத்தில் கடந்த 24,25,26 ஆம் திகதிகளில் தொடர்ந்து 3 தினங்கள் விவாதங்களும் இடம்பெற்றன. இவ்வாறு "உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள்" தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதங்கள் நடத்தப்படுவது இது முதல் தடவையல்ல. இதற்கு முன்னரும் 5 தடவைகளாக 11 தினங்கள் விவாதங்கள் நடத்தப்பட்டுள்ள நிலையிலேயே 6 தடவையாக கடந்த 24,25,26 ஆம் திகதிகளிலும் விவாதங்கள் நடத்தப்பட்டன.

2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி "உயிர்த்த ஞாயிறு" தினத்தில் கொழும்பு,நீர்கொழும்பு,மட்டக்களப்பு தேவாலயங்கள் மற்றும் கொழும்பிலுள்ள 5 நட்சத்திர ஹோட்டல்களில் முஸ்லிம் பயங்கரவாதிகளினால் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு இன்று 5 வருடங்களை கடந்துள்ள போதும் அமெரிக்கா , அவுஸ்திரேலியா, ஸ்கொட்லாண்ட் விசாரணைகள் உள்ளிட்ட இலங்கை அரசுகளின் விசாரணைகள் முச்சந்தியில் விழிபிதுங்கி நிற்பதுபோன்றே இந்த தாக்குதல் தொடர்பில் பாராளுமன்றத்தில் 6 தடவைகளாக 14 நாட்களாக நடத்தப்பட்ட விவாதங்களும் உப்புச் சப்பில்லாமலே முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. பாராளுமன்றத்தில் 6 தடவைகளாக 14 நாட்களாக நடத்தப்பட்ட விவாதங்களுக்கு ஒரு நாளைக்கு 1.5 கோடி ரூபா வீதம் 21 கோடி ரூபா மக்களின் பணம் வீணடிக்கப்பட்டதேயன்றி விவாதங்களில் உருப்படியான எந்தவொரு தகவல்களையோ நகர்வுகளையோ , முன்னேற்றங்களையோ,முடிவுளையோ காணக் கிடைக்கவில்லை.எதிர்வரும் தேர்தல்களை இலக்கு வைத்த ஒரு தேர்தல் பிரசார ஆரம்பமாகவே கடந்த 3 நாட்கள் விவாதங்களும் அமைந்திருந்தன. அரசுக்கு

எதிர்க்கட்சியும் எதிர்கட்சிக்கு அரசும் சேறுகளை பூசிக்கொண்டதுடன் பரஸ்பரம் குற்றச்சாட்டுக்களை ஒருவருக்கொருவர் சுமத்திக் கொண்டனர் .

உயிர்த்த ஞாயிறு கொடூர தாக்குதல்கள் நடைபெறப்போகின்றனவென 2019 ஏப்ரல் 4ஆம் திகதிக்கும் 9 ஆம் திகதிக்கும் இடையில் துல்லியமான உளவுத் தகவல்கள் இலங்கை புலனாய்வுத்துறைக்கு கிடைத்துள்ள போதும் அதனை வெளிப்படுத்தாது அரசியல்வாதிகளை மட்டும் பாதுகாக்கும் அறிவித்தல்களை விடுத்து விட்டு புலனாய்வுத்துறை மௌனம் காத்த அதேவேளை , தமக்கு விடுக்கப்பட்ட தாக்குதல் அபாயம் குறித்த எச்சரிக்கையை பகிரங்கப்படுத்தாது தமது பாதுகாப்பை மட்டும் உறுதிப்படுத்திக்கொண்டதுடன் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று கிறிஸ்தவ அரசியல் வாதிகள் உட்பட எந்தவொரு அரசியல் வாதியும் தேவாலயங்களுக்கு கூட செல்லாது தமதும் தமது நெருங்கிய உறவினர்களினதும் உயிர்களை மட்டும் பாதுகாத்துக்கொண்டு அப்பாவி மக்களுக்கும் இலங்கை அரசையும் பாதுகாப்புத்தரப்பினரையும் நம்பி வந்த வெளிநாட்டவர்களுக்கும் நம்பிக்கைத் துரோகம் செய்ததைப்போன்றே தாக்குதல் நடந்து 5 வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையிலும் அதே நம்பிக்கைத் துரோகங்கள் தொடர்கின்றன.



சம்பவம் ஒன்று நடந்தால் அந்தப்பழியை ,குற்றச்சாட்டை அப்போது பிரதமராக விருந்த ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு மீது போடுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரான அப்போதைய ஜனாதிபதி மைத்திரி பாலசிறிசேனாவும் ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேன மீது போடுவதற்கு பிரதமர் ரணிலும் ஜனாதிபதி,பிரதமர் தலைகள் மீது போடுவதற்கு பொதுஜன பெரமுனவின் அப்போதைய எதிர்க் கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஸவும் அரசியல் இலாபங்களுக்காக காத்திருந்ததாலேயே இந்த "உயிர்த்த ஞாயிறு "தின தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள் தங்கு தடையின்றி நடத்தப்பட்டன. எவருமே மக்களைப்பற்றி சிந்திக்கவில்லை. ஆகவே தாக்குதலை நடத்திய பயங்கரவாதிகளின் நோக்கமும் அதனை தடுக்காது விட்ட அரசியல்வாதிகளின் நோக்கமும் ஒன்றாகவே இருந்தது.

அதே போன்றே தாக்குதல் நடந்து 5 வருடங்கள் கடந்தும் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் பழியை ,குற்றச்சாட்டை அப்போது பிரதமராக விருந்த ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க மீது போடுவதற்கு ஒரு தரப்பும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரான அப்போதைய ஜனாதிபதி மைத்திரி பாலசிறிசேன மீது போடுவதற்கு இன்னொரு தரப்பும் மைத்திரிபால சிறிசேன ,ரணில் மீது போடுவதற்கு இன்னொரு தரப்பும் ராஜபக்ஸக்கள் மீது போடுவதற்கு இன்னொரு தரப்புமென குண்டுத்தாக்குதல் குற்றச்சாட்டை சங்கீதக் கதிரையாக்கி வருவதனை தொடர்வதனையே கடந்த 3 நாட்கள் விவாதங்களும் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தி நின்றன.

முஸ்லிம் பயங்கரவாதிகளின் இந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நாட்டையும் மக்களையும் அதலபாதாளத்துக்குள் தள்ளிய நிலையில் ஏற்கனவே அந்தப் பாதாளத்துக்குள் விழுந்துகிடந்த அரசியல்வாதிகளும் அரசியல் கட்சிகளும் தமது

அசுத்தங்களை மறைத்துக்கொண்டு மேலெழுந்து வருவதற்கு இக்கொடூர தாக்குதல்களை தமக்கான ஓட்சிசனாகப் பயன்படுத்தி ஒரு தரப்பினர் ஆட்சியைப் பிடித்தனர் .ஆட்சியிலிருந்தவர்கள் எதிர்கட்சியாகினர். இன்று வேறு ஒரு வகையிலான ஆட்சி இடம்பெறுகின்றபோதும் தற்போது வரை ஆட்சியிலிருப்பவர்களும் எதிர்க்கட்சிகளும் இந்த உயிர்த்த ஞாயிறு தின கொடூரத்தை தமக்கான அரசியல் பிரசார ஆயுதமாகவே பயன்படுத்தி வருகின்றனர்.தற்போது கூட உயிர்த்த ஞாயிறு தாக்குதலை எதிர்வரும் தேர்தல் பிரசாரங்களுக்கான ஆயுதமாகவே தென்னிலங்கை அரசியல் கட்சிகள் பயன்படுத்தப்போகின்றன என்பதற்கு இந்த பாராளுமன்ற விவாதமே கட்டியம் கூறி நிற்கின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் அரசியல் ரீதியிலும் ஆட்சி ரீதியிலும் பல நெருக்கடிகள் உருவாகியிருப்பதைப்போலவே மக்கள் மத்தியிலும் பொருளாதார நெருக்கடிகள் அதிகரித்து வாழ்க்கைச் சுமையைத் தாங்க முடியாத ஒரு பரிதாப நிலையே காணப்படுகின்றது. ஆனால் இவை"ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களின் சூத்திரதாரிகள் யார்" என்ற கோஷத்தினால் கடந்த 5 வருடங்களாக மூடி மறைக்கப்பட்டு வருகின்றன. இனியும் மூடி மறக்கப்படவே போகின்றன சூத்திரதாரிக கண்டுபிடிக்கப்பட்டால் தென்னிலங்கை அரசியல் கட்சிகளுக்கு புதிய பிரசார ஆயுதங்களை தேட வேண்டியேற்படும் என்பதனால் இந்த தாக்குதல் பிரசார ஆயுதத்தையே அவர்கள் தொடர்ந்தும் பயன்படுத்தவுள்ளனர்.

"உயிர்த்த ஞாயிறு" தின தற்கொலைக்கு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை முழு நாட்டினாலும் பெரிதாக எதிர்பார்க்கப்பட்டதுடன் அதில் பல விடயங்கள் அம்பலமாகும் எனவும் கணிக்கப்பட்டிருந்தது. எனினும் அறிக்கை வெளிவந்தவுடன் அதனை பகிரங்க படுத்த அரச தரப்பு பின்னடித்தது. இதன்மூலம் அறிக்கை மீதான எதிர் பார்ப்பு மேலும் அதிகரித்ததுடன் அந்த அறிக்கையை நாட்டுக்கு பகிரங்கப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கைகளும் அழுத்தங்களும் வலுத்தன . அறிக்கை தனக்கு கையளிக்கப்பட்ட வேண்டுமென கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வீதியிலிறங்கி போராடுமளவுக்கும் நீதிகோரி சர்வதேசம் செல்வேன் என எச்சரிக்குமளவுக்கும் அரசு அந்த அறிக்கையை வைத்து படம் காட்டியது.

ஆனால் சில தாமதங்களின் பின்னர் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் பகிரங்கப்படுத்தப்பட்டபோதுதான் அது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குற்றவாளிகள் இவர்கள் தான் என்பதனை வெளிக்காட்டாத அறிக்கை என்பது வெளிப்பட்டு முழு நாடும் அதிர்ச்சியடைந்தது. அந்த அறிக்கையை வைத்தே பல மாதங்களை பரபரப்பாக்கி பரஸ்பரம் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அரசும் எதிர்க்கட்சிகளும் காலத்தைக் கடத்தின.இடையிடையே கர்தினால் மல்கம் ரஞ்சித்தும் சூடான அறிக்கைகளை விட்டு பின்னர் அமைதியாகிக் கொண்டிருந்தார். ஒரு கட்டத்தில் தாக்குதல் நடத்தப்பட்டதன் பின்னர் அவர் கோத்தபாய ராஜபக்ஸ அரசுடன் நடத்திய பேச்சுக்கள் , கொடுத்த மத ரீதியிலான அழுத்தங்களை அமைச்சர்கள் பாராளுமன்றத்திலேயே பகிரங்கப்படுத்தி கர்தினாலை மறைமுகமாக மிரட்டி அமைதியடைய வைத்தனர் .

பிரதான சூத்திரதாரிகளை கைதுசெய்யாமை , தாக்குதலுடன் தொடர்புபட்ட சிலரை விசாரணை அறிக்கையில் உள்வாங்காமை, சந்தேக நபர்களை வெளிநாடு தப்பி செல்ல அனுமதித்தமை , விசாரணைகளில் இழுத்தடிப்புக்கள், என அரசு காலத்தைக் கடத்துவதையே இலக்காகக் கொண்டிருந்தது. "உயிர்த்த ஞாயிறு" தின தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்டவர்களின் பெரும் பகுதியினர் தமிழ் கிறிஸ்தவர்கள் என்பதினாலும் பாதிப்பை ஏற்படுத்தியவர்களின் தரப்பான முஸ்லிம்களும் சிறுபான்மையினத்தவர்கள் என்பதினாலுமே அரசு நீதியை வழங்காது கடந்த 5 வருடங்களாக "உயிர்த்த ஞாயிறு" தின தற்கொலைக் குண்டுத் தாக்குதலை வைத்து அரசியல் செய்தது.

இனி இந்த வருடம் ஜனாதிபதி, பாராளுமன்றத் தேர்தல்கள் வர விருப்பதால் "உயிர்த்த ஞாயிறு"தாக்குதல் மீண்டும் உயர்ப்பிக்கப்படுகின்றது அதில் முதல் உயிர்ப்பிப்பாகவே தாக்குதல் நடந்தபோது ஜனாதிபதியாக இருந்தவரும் நீதிமன்றத்தால் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு 10 கோடி ரூபா வரையில் நஷ்டஈடு செலுத்துமாறு உத்தரவிடப்பட்டவருமான மைத்திரி பால சிறிசேன "உயிர்த்த ஞாயிறு" தின தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சூத்திரதாரியை தனக்கு தெரியுமென 5 வருடங்களுக்கு பின்னர் கூறி தேர்தல் குண்டை வெடிக்க வைத்தார் அதனால் இப்போது நாட்டில் மீண்டும் அதிர்வுகள் ஏற்படத் தொடங்கியுள்ளன. விவாதங்கள் சூடு பிடிக்காத தொடங்கியுள்ளன. தேர்தல்கள் நடந்து முடியும் வரை மீண்டும் "உயிர்த்த ஞாயிறு" தின தற்கொலைக்குண்டுத்தாக்குதல்கள் பெரும் பிரசார ஆயுதமாக வெடிக்க வைக்கப்பட்டுக்கொண்ட இருக்கும்

"உயிர்த்த ஞாயிறு "தின தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களில் பயங்கரவாதிகளின் நோக்கமும் அரசியல்வாதிகளின் நோக்கமும் ஒன்றாகவே இருந்துள்ளதனால் தான் தாக்குதல் நடந்து 5 வருடங்களாகி விட்ட நிலையிலும் தாக்குதல் சூத்திரதாரிகளும் சிக்கவில்லை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியும் கிடைக்கவில்லை. ஆனால் அந்த தாக்குதலை பயன்படுத்தி ஆட்சி மாற்றங்களும் தேர்தல் வெற்றி, தோல்விகளும் தீர்மானிக்கப்படுவது மட்டும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன .

பாராளுமன்றத்தில் 6 தடவைகளாக 14 நாட்களாக நடத்தப்பட்ட விவாதங்களுக்கு ஒரு நாளைக்கு 1.5 கோடி ரூபா வீதம் 21 கோடி ரூபா மக்களின் பணம் வீணடிக்கப்பட்ட நிலையில் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்தப்பணத்தை நிவாரணமாக பங்கிட்டு வழங்கியிருந்தால் கூட அது அந்த மக்களின் மனங்களை ஓரளவுக்காவது ஆற்றுப்படுத்தியிருக்கும்.

# 'அரகலய'வுக்குப் பின்னர் சிங்கள அரசு அஞ்சியது முள்ளிவாய்க்கால் கஞ்சிக்கே!



கஞ்சி காய்ச்சிக் கொடுப்பது கூட குற்றமாகப் பார்க்கப்படும் ஒரு நாடு. அதற்கு அவர்கள் கொடுக்கும் சட்ட விளக்கங்கள் எதுவாகவும் இருக்கலாம். உண்மை எதுவென்பது முழு உலகத்துக்கும் தெரியும். இறுதிக்கட்டப் போரில் உணவு ஓர் ஆயுதமாக பயன்படுத்தப்பட்டது என்று கூறி அந்த உணவையே ஒரு நினைவுப் பொருளாக மாற்ற வேண்டும் என்று முதலில் கூறியது தமிழ் சிவில் சமூக அமையம் என்ற ஒரு குடிமக்கள் சமூகம் தான். கஞ்சியை ஒரு நினைவுப் பொருளாக மாற்றி கிராமங்கள் தோறும் அதை சமைத்துப் பரிமாற வேண்டும் என்ற நடைமுறையை அந்த சிவில் சமூகம் தான் பரவலாக்கியது. இப்பொழுது கஞ்சி பரவலாகிவிட்டது. தாயகத்திலும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் மத்தியிலும் கஞ்சி ஒரு நினைவு பொருளாக மாற்றப்பட்டிருக்கிறது.

ஆனால் கடந்த வாரம் திருகோணமலையில் நடந்த சம்பவமானது அரசாங்கம் கஞ்சியை ஒரு குற்றப் பொருளாகப் பார்க்கின்றதுஎன்பதனை காட்டுகின்றது. விடுதலைப் போராட்டம் சம்பந்தப்பட்ட எல்லாவற்றிற்கும் பயப்படும் அரசாங்கம் கஞ்சிக்கும் பயப்படுகின்றது. கஞ்சியைத் தடுப்பதன் மூலம் அரசாங்கம் தமிழ் மக்களுக்கு உணர்த்துவது எதனை? சிங்கள மக்களுக்கு உணர்த்துவது எதனை?

தமிழ் மக்களுக்கு நினைவுகூர்தலில் இருக்கக்கூடிய வரையறைகளை அரசாங்கம் உணர்த்த முயற்சிக்கின்றது. அதேசமயம் சிங்கள மக்களுக்கு நினைவு கூர்தலை தடுப்பதில் அரசாங்கம் தீவிரமாக இருக்கிறது என்பதனை உணர்த்த விரும்புகிறது. கூட்டிக்கழித்துப் பார்த்தால் தனிச்சிங்கள வாக்குகளை எப்படித் திரட்டுவது என்று அரசாங்கம் சிந்திக்கின்றது என்று எடுத்துக் கொள்ளலாமா ?

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் யாருடைய பொது வேட்பாளராகக் களமிறங்குவார் என்பது இன்று வழி தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் அவர் ராஜபக்சக்களின் பொது வேட்பாளராகக் களமிறங்கும்

சாத்தியக்கூறுகள்தான் அதிகமாகத் தெரிகின்றன. அப்படி ஒரு நிலைமை வந்தால், அவருக்கு இதுபோல தமிழ் மக்களின் உணர்வுகளை ஒடுக்கும்

நடவடிக்கைகள் தேவை. தமிழ் மக்களுக்கு எதிராக ஒடுக்கு முறைகளைத் தீவிரப்படுத்தினால் தமிழ் மக்கள் எதிர்த்துப் போராடுவார்கள். தமிழ் மக்கள் போராடும் போது அதற்கு எதிராக சிங்கள மக்கள் மத்தியிலும் எதிர்ப்பு அலை தோன்றும். அதுபோன்ற எதிர்ப்பு அலைகள்தான் தனிச்சிங்கள வாக்குகளைத் திரட்ட உதவும் என்று அரசாங்கம் சிந்திக்கின்றதா ?

அடுத்த 15 ஆண்டுகளிலும் கஞ்சி படிப்படியாகப் பரவி வந்திருக்கிறது. அந்த பரவலாக்கத்துக்குள் தெளிவின்மைகள் உண்டு. குழப்பங்கள் உண்டு. கஞ்சி தொடர்பாக ஒரு பொதுவான "ரெஸிபி" உண்டு. எனினும் கஞ்சியைக் காய்ச்சும் எல்லாருமே அதனைப் பின்பற்றுவதாகத் தெரியவில்லை. இறுதிக் கட்டப் போரின் இறுதி மாதங்களில் தேங்காய் இருக்கவில்லை. ஆனந்தபுரம் சண்டையோடு தேங்காய் பெருமளவுக்கு இல்லாத ஒரு நிலை வந்து விட்டது. ஆனால் அரிசி கோதுமை மா போன்றன இருந்தன. இந்நிலையில் ஒரு பெரிய கிடாரத்தில் அரிசியைப் போட்டு போதிய அளவு நீர் விட்டு வேக விடுவார்கள். அரிசி வேகி வரும்பொழுது, பாலுக்குப் பதிலாக இரண்டு அங்கர் பால் மா பக்கெட்டுகளைக் கரைத்து அதற்குள் ஊற்றுவார்கள்.இப்படித்தான் முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரிக்கப்பட்டது.

அந்தக் கஞ்சி வழமையாக வீடுகளில் சமைக்கும் கஞ்சிகளைப் போல சுவையானது அல்ல. அது சுவையற்றது. ஆனால் அந்த அந்த நேரத்தில் அது தான் பலருக்கு இன்றியமையாத உணவாக இருந்தது. அது ருசியானதா இல்லையா என்ற கேள்வி அங்கே இருக்கவில்லை. பசிக்கு உணவு அவ்வளவுதான். எனவே கஞ்சியைப் பரவலாக்கும் பொழுது அதன் ருசியின்மையும் பரவலாக்கப்பட வேண்டும். அந்த ருசியின்மைக்குள்தான் செய்தி இருக்கிறது. அந்த ருசியின்மைக்குள்தான் அடுத்த தலைமுறைக்கு கொடுக்கப்பட வேண்டிய செய்தி இருக்கிறது.

அந்த ருசியின்மைதான் கடைசிக் கட்டப் போரில் தனித்து விடப்பட்ட மக்களுடைய கண்ணீரின் ருசி. அந்த ருசியின்மைதான் அந்த மக்கள் சிந்திய ரத்தத்தின் ருசி. அந்த ருசியின்மைதான் மரணத்தின் ருசி. தோல்வியின் ருசி ஒரு யுக முடிவின் ருசி. அந்த ருசியை அல்லது அந்த ருசியின்மையை தமிழ்ப் பரப்பு எங்கும் பரவலாக்கும் பொழுது ஒரு தலைமுறையில் இருந்து இன்னொரு தலைமுறைக்கு நினைவுகளும் செய்திகளும் கடத்தப்படுகின்றன. அந்த ருசியின்மைக்கு பின்னால் இருக்கும் செய்தி அந்த ருசியின்மைக்கு பின்னாலிருக்கும் அரசியல் உலகத்தின் மனசாட்சியின் கையாலாகத்தனம் போன்றவை தொடர்பான செய்திகள் பரவலாக்கப்படுகின்றன.

ஒரு சிறிய மக்கள் கூட்டம் ஒடுங்கிய ஒரு கடற்பரப்பில் ஏன் தனித்து விடப்பட்டது?என்ற செய்தி அந்த ருசிக்குள் இருக்கிறது. உலகின் பெரும்பாலான நாடுகள் அந்த சிறிய மக்கள் கூட்டத்தை ஏன் கைவிட்டன? என்ற கேள்வி அந்த ருசிக்குள் இருக்கிறது.உலகப் பெரு நிறுவனமாகிய ஐநா போன்ற நிறுவனங்கள் ஏன் அந்த மக்களைக் காப்பாற்றவில்லை? என்ற கேள்வி அந்த ருசிக்குள் இருக்கிறது.

இன்று காசாவில் இனப்படுகொலை செய்யப்படும் பலஸ்தீனர்களுக்காக குரல் கொடுக்க ஒரு தென்னாபிரிக்கா இருக்கிறது. வேறு சில நாடுகள் இருக்கின்றன. ஆனால் அன்றைக்கு தனித்து விடப்பட்டிருந்த் சுற்றி வளைக்கப்பட்டிருந்த ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை அப்படி எந்த நாடும் பகிரங்கமாக முன்வரவில்லை. ஏன் முழு உலகமும் ஈழத் தமிழர்களை கைவிட்டது ? என்று

# கனடா ‘கனடிய பல்லின பத்திரிகையாளர்கள் கழகம்’ ‘சர்வதேச பத்திரிகைச் சுதந்திர நாளை’ கொண்டாடி மகிழ்ந்தது.

10-05-2024 அன்று வெள்ளிக்கிழமையன்று கனடாவில் இயங்கிவரும் ‘கனடிய பல்லின பத்திரிகையாளர்கள் கழகம்’ (National Ethnic Press and Media Council of Canada) தனது அங்கத்தவர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் ஆகியோர் சகிதம் ‘சர்வதேச பத்திரிகைச் சுதந்திர நாளை’ கொண்டாடி மகிழ்ந்தது.




மேற்படி விழா ரொறன்ரோ மாநகரில் அமைந்து மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.






National Ethnic Press and Media Council of Canada என்னும் பத்திரிகையாளர்கள் கழகத்தின் தலைவர் தோமஸ் சாரஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த பத்திரிகையாளர்கள் விழாவில் கனடா உதயன் சார்பிலும் அதன் பிரதம ஆசிரியர் மற்றும் நண்பர்கள் கலந்து கொண்டு தங்கள் ஆதரவை வழங்கினார்கள். உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் அவர்கள் மேற்படி யேவழையெட நுவாளைஉ ˚சநளள யனெ ஆநனயை ஊழரஉெடை ழக ஊயயெனய பத்திரிகையாளர்கள் அமைப்பின் நீண்ட கால உறுப்பினர் என்பதும் அதன் சிரேஸ்ட உப- தலைவர்களில் ஒருவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# தமிழ் பொது வேட்பாளர் விடயத்தின் முக்கியத்துவம் சார்ந்து செயற்படும் யாழ்ப்பாண அமைப்புகளும் தொடர்ச்சியாக ஆதரவு தெரிவித்து வருகின்றன

தமிழ் பொது வேட்பாளர் விடயத்தின் முக்கியத்துவம் கருதி வேறு பல சமூக நலன் சார்ந்தும் மக்கள் சார்ந்தும் செயற்படும் அமைப்புகளும் தொடர்ச்சியாக ஆதரவு தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.
தமிழ் பொதுவேட்பாளர் தொடர்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர்ச்சியான மக்கள், சமூக அமைப்புகளுடனான உரையாடலின் ஒரு கட்டமாக திங்கட்கிழமை 27.05.2024 மாலை யாழ்ப்பாணம் வணிகர் கழகத்துடனான சந்திப்பு நடைபெற்றது.

பொதுவேட்பாளர் விடயத்தில் தொடர்ச்சியான செயற்பாட்டில் இருக்கும் சமூக [சிவில்] அமைப்புகளின் கூட்டிணைவு சார்பாக கலந்துகொண்ட பேராசிரியர் கே.ரி கணேசலிங்கம், சட்டத்தரணி சி.அ.யோதிலிங்கம் உள்ளிட்ட பிரதிநிதிகளுக்கும் யாழ் வர்த்தக சங்கத்தின் தலைவர் செயலாளர் உட்பட்ட முக்கிய உறுப்பினர்களுக்குமான கலந்துரையாடல் யாழ் வர்த்தக சங்க கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளரை நிறுத்துவதற்கான நோக்கம் அதன் முக்கியத்துவம் தொடர்பாக விரிவாக பேசப்பட்டிருக்கிறது.

சந்திப்பின் ஆரம்பத்திலேயே பொதுவேட்பாளரின் அவசியத்தை முன்னிறுத்தி அது விரைவாகவும் வீரியமாகவும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்கின்ற நிலைப்பாட்டை வர்த்தக சங்கத்தினர் முன் வைத்திருக்கின்றனர். இது பொதுவேட்பாளர் தொடர்பான விழிப்புணர்வு மக்கள் மத்தியிலும் சமூக நிறுவனங்கள் மத்தியிலும் தன்னியல்பாக தோன்றியுள்ளமையின் வெளிப்பாடு என சந்திப்பில் கலந்து கொண்டவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

மேலும் இச்சந்திப்பில் பொதுவேட்பாளர் முன்னெடுப்பில் தொடர்ச்சியாக இயங்கிவரும் சிவில் சமூக அமைப்புகளின் கூட்டிணைவில் யாழ் வர்த்தக சங்கமும் இணைந்து செயற்படுவதை உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். இது தொடர்பான தமது அறிக்கையை முன்வைப்பதாகவும் ஊடகங்கள் ஊடாக தமது உடன்பாட்டையும் இதன் அவசியத்தையும் வெளிப்படுத்தி தொடர்ந்து இக்கோரிக்கையை வலுப்படுத்துவதில் பங்காற்றுவதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

தமிழ் பொது வேட்பாளர் விடயத்தின் முக்கியத்துவம் கருதி வேறு பல சமூக நலன் சார்ந்தும் மக்கள் சார்ந்தும் செயற்படும் அமைப்புகளும் தொடர்ச்சியாக ஆதரவு தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வது தொடர்பில் சர்ச்சை வெடித்தது

யாழ்ப்பாணம் மாவட்டத்திறகான நாடாளுமன்ற உறுப்பினர்களிற்கான நிதி ஒதுக்கீடு மறுக்கப்பட்டுள்ள போதும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் பெயரில் யாழ்ப்பாணத்திற்கு 25 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டமை தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் பெரும் சர்ச்சை ஏற்பட்டது.

30-05-2024 வியாழக்கிழமை அன்று நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்திலேயே இந்த சர்ச்சை வெடித்தது.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றைய தினம் வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ். சாள்ஸ் மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே இவ் விடயம் பெரும் சர்ச்சையாக உருவெடுத்தது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 7 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒரு வெகுமதி ஆசனப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினருமாக 8 பேர் உள்ளனர். இதில் டக்ளஸ் தேவானந்தா, த.சித்தார்த்தன், சி.சிறிதரன் ஆகிய மூவருக்கு மட்டும் நிதி ஒதுக்கீட்டிற்கான அனுமதி ஜனாதிபதி செயலகத்தினால் வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.வி.விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் மற்றும் அங்கஜன் இராமநாதன் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டிற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இவற்றை சுட்டிக் காட்டிய நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வராஜா கஜேந்திரன் மற்றும் அங்கஜன் இராமநாதன் போன்றோர் இது வேண்டுமென்றே புறக்கணிக்கப்படும் செயல்பாடாக உள்ளது என்று குரல் எழுப்பினர்.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் பரிந்துரையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 14 திட்டங்களிற்கு 25 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதன் பெயரில் அத்திட்டங்களை நடைமுறைப்படுத்த ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதி கோரப்பட்ட சமயமே சர்ச்சை ஏற்பட்டபோது. அவ்வாறானால் அத்திட்டங்களை அனுமதிக்க முடியாது என தீர்மானிக்கவா என ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரினார்.

“எமது மாவட்டத்தில் எமது மக்களின் அபவிருத்திக்காக வந்த பணத்தை திருப்பி விட விரும்பாத காரணத்தினால் அதனை அனுமதிக்கின்றோம். இதே நேரம் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரான நீங்கள் கூறிய கால அவகாசத்தில் நாமும் எமது திட்டங்களை மாவட்டச் செயலகத்தில் கையளித்தோம் இருந்தும் எமது திட்டங்கள் மட்டும் அனுமதிக்கப்படவில்லை” என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் பரிந்துரைகளை சமர்ப்பித்த மறுநாளே அவற்றை ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பி அதன் பிரதியை உரிய நாடாளுமன்ற உறுப்பினர்களிற்கும் அனுப்பி வைத்தோம் என மாவட்டத்தின் கடமை நிறைவேற்று அரச அதிபர் ம.பிரதீபன் தெரிவித்தார்.



# மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை புறக்கணித்த அரச உத்தியோகத்தர்கள்

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் அனைவரும் ஒன்றிணைந்து புறக்கணித்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் வியாழக்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ். சாள்ஸ் மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் 30-05-2024 வியாழக்கிழமை இடம்பெற்றது.
இந்த மாவட்டத்திலும் மாகாண சபையின் அலகிலும் பணியாற்றும் சுமார் 25 நிர்வாக சேவை அதிகாரிகள் உள்ளனர். எனினும் அவர்கள் இந்த கூட்டத்தை புறக்கணித்தனர்.

நிர்வாக சேவை அதிகாரிகளின் பணிப் புறக்கணிப்பு காரணமாக இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மாவட்ட கடமை நிறைவேற்று அரச அதிபர் ம.பிரதீபன் மற்றும் மாகாண சபையை சேர்ந்த பொ.வாகீசன் ஆகிய இரு அதகாரிகள் மட்டுமே கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.
ஊதிய உயர்வு உட்பட பல கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்தத்தில் இந்த நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

### மருத்துவ கழிவுகள் பிரச்சனை

அரியாலையில் பொதுமக்கள் குடியிருப்புகள் மத்தியில் உள்ளகாணியில் சுகாதாரத்திற்கும் தீங்கு விளைவுக்கும் வகையில் மருத்துவ கழிவுகள் எரியூட்டப்பட்டமை எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ளபடவேண்டும் என்றும் இதனை கண்காணிக்க உரிய பொறிமுறை அவசியம் என பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் இன்றையதினம் மாவட்ட அபிவிருத்தி கூட்டத்தில் முன்மொழிந்து கோரிக்கை வைத்தார்.

இதன்போது அமைச்சர் வைத்தியசாலை பணிப்பாளரிடமும் இது தொடர்பில் கேள்வி எழுப்பினார் இதற்கு பணிப்பாளர் சம்பவத்திற்கு அடுத்தநாளே கழிவுகள் வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டு தற்காலிகமாக அந்த கழிவுகளை பாதுகாப்பாக சேமித்து வைத்துள்ளோம் மற்றும் புதிய எரியூட்டி தெல்லிப்பழையில் உள்ள எரியூட்டிகளில் எரிக்கப்பட்டுவருகின்றன இந்த காணி வைத்தியசாலைகாணி என்பதாலே அங்கு சேமிக கப்பட்டு வந்தது மக்களின் போராட்டத்தை அடுத்து அடுத்தநாளே அகற்றப்பட்டுவிட்டது என்று தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் இந்த விடயத்தை நியாயப்படுத்தாமல் கவனமாக பார்க்கவேண்டும் அவதானமாக செயற்பட்டிருக்கலாம் உங்களது காணியாக இருந்தாலும் இவ்வாறு இனிஇடம்பெறாமல் பாருங்கள் என்று தெரிவித்தார்.



# யாழ்ப்பாணத்தில் இனி படையினருக்கு தனியார் காணிகளை வழங்க அளவீடு இல்லை என தீர்மானம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தனியார் காணிகளை படைத் தரப்பிற்கு வழங்குவதற்கு அளவீடு செய்வதில்லை என்ற தீர்மானம் வியாழக்கிழமை (30-05-2024 ) அன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

வியாழக்கிழமை காலை சுழிபுரம் பகுதியில் கடற்படைக்கு மேலும் சில ஏக்கர் காணிகளை அபகரிக்கும் முயற்சியில் அரச தரப்பு அளவீடுகளை செய்ய முற்பட்ட வேளை அது அரசியல் கட்சிகள் மற்றும் பொதுமக்களின் எதிர்ப்பு காரணமாக தடுத்து நிறுத்தப்பட்டது.

இச்சம்பவம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் எதிரொலித்தது.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றைய தினம் அதாவது மே மாதம் 30 ஆம் திகதி வியாழக்கிழமை- வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ்.சாள்ஸ் மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே படையினருக்கு தனியார் காணிகள் அளவீடு செய்யப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்று கோரும் தீர்மானம் ஒன்றை யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவருமான சிவஞானம் சிறிதரன் முன்மொழிந்தார்.

கடந்த 2011 ஆம் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் காலத்திலிருந்தே தனியார் காணிகளை அளவீடு செய்து அதை படையினருக்கு அளிக்கும் முயற்சிகள் தொடர்ந்தவண்ணமே உள்ளன. பல சந்தர்ப்பங்களில் அரசியல் கட்சிகளும், தமிழ் மக்களும் ஒன்றிணைந்து அந்த நடவடிக்கையை முறியடித்திருந்தாலும் அது தொடர்ந்துகொண்டே இருந்தது.

அவ்வகையில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் சுழிபுரம்-திருவடியில் கடற்படையினருக்கு நிலம் சுவீகரிப்பதற்காக நில அளவைத் திணைக்களத்தினர் தனியார் காணிகளை அளவீடு செய்ய முயன்றதனால் அங்கு போராட்டம் இடம்பெற்றது.

எனவே இனி வருத் காலத்தில் படையிடருக்காக நிலம் சுவீகரிப்பதற்கு நில அளவைத் திணைக்களத்தினர் தனியார் காணிகளை அளவீடு செய்ய முயல்வதனை நிறுத்த வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கோரக்கை விடுத்த சமயம் படையினருக்கு நிலத்தை சுவீகரிக்க அளவீடு செய்து தருமாறு பிரதேச செயலாளர்கள் தமக்கு கடிதம் அனுப்பிவிட்டு அதனை படையினருக்கும் தெரியப்படுத்துகின்றனர். அதனால் படையினர் எமது அலுவலகத்திற்கு வருகை தந்து அளவீடு செய்து தருமாறு கோருவதனாலேயே நாம் செல்கின்றோம். பிரதேச செயலாளர்கள் கடிதம் அனுப்பினால் அதனை நாம் அளவீடு செய்ய வேண்டியது கட்டாயம். எனவே எமக்கு கடிதம் அனுப்ப வேண்டாம் என பிரதேச செயலாளர்களை அறிவுறுத்துங்கள் என நில அளவைத் திணைக்கள அதிகாரி தர்மபாலன் தெரிவித்தார்.

இதன்போது தனியார் காணிகளை படைத் தரப்பிற்கு வழங்குவதற்கு அளவீடு செய்வதில்லை என்று தீர்மானம் ஒன்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் முன்மொழிந்தவர் இந்த தீர்மானத்தை அங்கஜன் இராமநாதன் வழிமொழிய தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.



For All Your Traveling Needs
Cheapest Air Fare In Town
Please call Mr. Lavan

Lowfare
travels and tours

Phone: 416.261.0555
2625 Eglington Ave East
Scarborough, Ontario
M1K 2S2

# தேசம்

NATION THE THESAM

EXPERIENCE THE DIFFERENCE
RE/MAX ACE
REALTY INC, BROKERAGE



Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment

Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
toronto.baskaran@gmail.com

Issue - 03 Once a Month MAY 2024

## தமிழ்த் தேசத்தைத் திரட்ட வேண்டிய பொறுப்பு தமிழ்ப் பொது வேட்பாளராக வருபவருக்கு உண்டு

பக்கம் 06





## ‘அரகலய’வுக்குப் பின்னர் சிங்கள அரசு அஞ்சியது‘ முள்ளிவாய்க்கால் கஞ்சிக்கே!

பக்கம் 21

## இலங்கையில் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்களைப் பயன்படுத்தி ஆட்சி மாற்றங்களும் தேர்தல் வெற்றிகளும் தீர்மானிக்கப்படுவது தொடர்கிறனவா?

பக்கம் 20



## “இலங்கையில் தமிழ் ஊடகவியலாளர்கள் படுகொலைகளுக்கு சர்வதேச விசாரணை

பக்கம் 16